**ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி**

**திருப்புத்தூர்**

**சிவகங்கை (மாவட்டம்)**

**தமிழ்த்துறை**

**இளநிலைப் பட்டப்படிப்பு (பருவமுறை)**

**பகுதி – 1 தமிழ்**

**இரண்டாம் ஆண்டு – (2017 – 2018) (ஜூன் - நவம்பர்)**

**மூன்றாம் பருவம் (தாள் - 111)**

**காப்பியமும் நாடகமும்**

**அலகு – 1**

**காப்பிய இலக்கியம்**

1. சிலப்பதிகாரம் - அடைக்கலக் காதை
2. மணிமேகலை – ஆதிரை பிச்சையிட்ட காதை
3. கம்பராமாயணம் - குகப்படலம்
4. பெரியபுராணம் - கண்ணப்ப நாயனார் புராணம்
5. தேம்பாவணி – நீர்வர மடைந்த படலம்
6. சீறாப்புராணம் - பாத்திமா திருமணப் படலம்

(195 – 200 வரை உள்ள பாடல்கள்)

**1. சிலப்பதிகாரம் - மதுரைக் காண்டம் - அடைக்கலக் காதை**

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அடைக்கலக் காதையின் வழியாக அறியலாகும் கோவலனின் சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**மாடல மறையோன்**

கடலையே வேலியாகக் கொண்டது தலைச்செங்காடு என்னும் ஊர். அங்கே வாழ்பவன் நான்கு வேதங்களையும் நன்கு கற்று, பிறர்க்கு நன்மை செய்து வாழ்வதே கொள்கையாகக் கொண்ட மாடலன் என்னும் மறையவன். அவன் அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிய மலையை வணங்கி, வழிபட்டு, குமரிக்கடல் சென்று நீராடிவிட்டுத் தன்னுடைய சுற்றத்தார் இருக்கும் இடம் சேர வந்து கொண்டிருந்தான். அப்படி வந்த மாடல மறையவன், வழி நடந்த களைப்பால் ஏற்பட்ட வருத்தம் தீர, கவுந்தி அடிகள் இருந்த சோலையில் புகுந்தான். அவனைக் கோவலன் கண்டு வணங்கவே, வணங்கிய கோவலனிடம் நாவன்மை மிக்க மாடல மறையவன் கூறினான்.

**மாதவி மகள் மணிமேகலை**

அரசனால் தலைக்கோல் சிறப்பும் பேரும் புகழும் பெற்ற மாந்தளிர் போலும் மேனி வனப்புடைய மாதவி, பச்சிளம் குழந்தை ஒன்றைப் பெற்றாள். குழந்தை பிறந்த சில நாட்கள் கழிந்த பின்னனர், சித்திராபதி முதலிய வயதில் மூத்த சில கணிகையர்குலப் பெண்கள், மாதவி பெற்ற மகளுக்கு நாம் ஒரு நல்ல பெயர் சூட்டுவோம் என்று நினைத்து, 'ஓர் அழகிய பெயரைச் சொல்லுக' என்று கேட்டனர். அப்போது நீ, "நள்ளிரவில் நடுக்கடலில் சென்று கொண்டிருந்த என்னுடைய முன்னோர்களில் ஒருவன், மரக்கலம் உடைந்து அலைகடலில் தவிக்கலானான். முற்பிறவியில் பல புண்ணியங்களைச் செய்தவன் அவன் ஆதலின், கரையேற வழியின்றி நடுக்கடலில் தவித்த அவன் முன் ஒரு பெண் தெய்வம் தோன்றி, நான் இங்குள்ள ஒரு தீவில் வாழும் மணிமேகலைத் தெய்வம். இந்திரன் ஏவலால் இங்கு வாழ்பவள். இப்போது உன்னைக் காப்பாற்றவே வந்தேன். கவலையைவிடு. நீ செய்துள்ள புண்ணியத்தின் பயன் உன்னைத் தவிக்க விடாது. நிச்சயம் காப்பாற்றும் என்று கூறியபடி, ஒரு மந்திரத்தால் கடலில் இருந்து எடுத்துக் கரையில் சேர்த்துக் காப்பாற்றியது. 'என் முன்னோன் பட்ட துன்பம் துடைத்த, எம் குல தெய்வப் பெயரான 'மணிமேகலை' என்பதையே என் குலமகளுக்கு இடுக' எனச் சொல்ல, அழகு மேகலை அணிந்த ஆயிரம் பெண்கள் கூடி மணிமேகலை என்று பெயரிட்டு வாழ்த்தினர். அப்போது நீ மங்கலச் செல்வி மாதவி உடன் சேர்ந்து உன் செங்கை சிவக்கப் பொன்னை அள்ளிப் பூமழை போல் பொழிந்தாயே!

**வீரமும் கருணையும்**

நல்வழியில் செல்லும் பண்பாளன் தானம் பெறும் நோக்கத்துடன் வந்துகொண்டிருந்தான். அப்போது அங்கே பாகனுக்கு அடங்காது, பிளிறிக் கொண்டு யானை ஒன்றும் வந்தது. 'பாதையில் செல்வோர் கவனம்' என்று பறை ஒலி எழுப்பி எச்சரிக்கை செய்தனர். வேகமாக வரும் யானையைக் கண்டு பயந்தவர்கள் அதன் பார்வை படாது விலகிக்கொண்டனர். ஆனால், முதுமையாலும் தள்ளாமையாலும் தளர்ந்த நடையோடு, கோலூன்றிக் கூனல் முதுகோடு வரும் அந்த முதியவனால், விலகி ஓட முடியவில்லை. மத யானை, அந்த மறையவனைத் துதிக்கையால் பற்றித் தூக்குகிறது. அப்போது நீ 'ஒய்' என்று ஒலி எழுப்பி, யானை முன் பாய்ந்து அதன் பிடியிலிருந்து அந்த மறையவனை விடுவித்து அதன் துதிக்கை பற்றி, அதன் வளைந்த தந்தங்களைப் பிடித்து மேலேறி அதன் பிடரியில் அமர்ந்து, அந்த மத யானையின் சினம் அடக்கினாய். யானையின் மீது ஏறி, நீ அமர்ந்திருந்தது கரிய பெரும் குன்றேறி வித்தியாதர வீரன் அமர்ந்திருப்பது போல் காட்சி அளித்தது. இப்படி மறையவன் உயிரைக் காத்த நீ வீரமும் கருணையும் உடைய மறவன் அல்லவா?

## சினம் கண்ணை மறைத்தது

ஓர் அந்தணன் தன் வீட்டில் கீரிப்பிள்ளை ஒன்று வளர்த்துவந்தான். அவனுக்கு ஓர் ஆண் பிள்ளையும் இருந்தது. ஒரு நாள் அந்தணன் வெளியில் சென்றிருந்தான். அவன் மனைவி கைக்குழந்தையைத் தொட்டிலில் தூங்கச் செய்து குழந்தைக்குக் காவலாகக் கீரிப்பிள்ளையை வைத்து விட்டு, நீராடச் சென்றாள். சென்றவள் திரும்பி வருகிறபோது, வாயிற் படியில் கீரிப்பிள்ளை வாய் எல்லாம் இரத்தம் வடிய நின்று கொண்டிருப்பதைப் பார்த்து, கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் கடித்துக் குதறிக் கொன்று விட்டுத்தான் இப்படி வாயில் உதிரம் கொட்ட வந்து நிற்கிறது என்று தவறுதலாக நினைத்து தன் இடுப்பில் இருந்த தண்ணீர்க் குடத்தினைக் கீரிப்பிள்ளையின் மீது வீசி அதனைக் கொன்றாள். பின்னர், வீட்டினுள் சென்று பார்த்தபோது குழந்தை தொட்டிலில் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. தொட்டிலின் அருகே ஒரு நாகப் பாம்பு இறந்து கிடந்தது. அதன் உடலில் இரத்தம் கசிந்திருந்தது. தன் குழந்தையைத் தீண்ட வந்த நாகப் பாம்போடு கீரிப்பிள்ளை சண்டையிட்டு அதனைக் கொன்று தன் குழந்தையைக் காப்பாற்றியுள்ளதனை அவள் அறிந்தாள். கீரிப்பிள்ளையை நினைந்து வருந்தினாள். தன் கணவன் வந்ததும் அவனிடம் நடந்தவற்றைக் கூறினாள். நன்மை செய்த கீரிப்பிள்ளையைத் தவறுதலாக நினைத்துக் கொலைசெய்த தன் மனைவியை அவன் வெறுத்தான். அவளைவிட்டுப் பிரிந்து கங்கையாட வட திசைநோக்கிச் சென்றான். தன்னைத் தொடர்ந்து வந்த அவளிடம் அவன் ஓர் ஓலை நறுக்கில் வடமொழியில் ஒரு வாசகத்தை எழுதி, ‘இதனைக் கற்றறிந்த பெரியோர்களிடம் சென்று காட்டு’ எனக் கூறிச் சென்றுவிட்டான். அவள் அவ் ஓலையுடன் நகர வீதிகளில் அலைந்து அதன் பொருளினை அறிய முற்பட்டாள். நீ அவளைக் கண்டு அவளின் துயரத்தினைத் துடைத்தாய். அவளை அவள் கணவருடன் இணைந்து வாழ வழிவகை செய்தாய். இப்படி நல்லதே செய்யும் வற்றாத செல்வ வளமுடையவன் நீ.

## தாய் படும் துயரம் தவிர்த்த தலைவன்

பத்தினிப் பெண் ஒருத்தியின் மீது வீணாகப் பொய்ப் பழி ஒன்றை, அவள் கணவனிடமே சென்று கூறினான் ஒரு மூடன். இவ்வாறு பொய்கூறுவோரைப் பிடித்து உண்ணும் ஒரு பூதம் அவனை வளைத்துப் பிடித்து உண்ணச் சென்றது. அப்போது அந்த மூடனைப் பெற்றத் தாய் அந்தப் பூதத்திடம் மன்றாடினாள். நீ அந்தத் தாய்க்கு இரங்கி, அந்தப் பூதத்திடம் தன்னுயிரை எடுத்துக்கொள்ளுமாறு வேண்டினாய். ஆனால், அந்தப் பூதம், ‘தீயவனுக்குப் பதிலாக ஒரு நல்லவனைக் கொல்லுதல் என் வழக்கம் அல்ல’ என்று கூறி மறுத்துவிட்டது. அந்த மூடனை உண்டுவிட்டது. நீ அந்தத் தாய்க்கு ஒரு மகனாகவே இருந்து பல ஆண்டுகள் அத்தாயையும் அவளின் உறவினர்களையும் பசிப்பிணி இன்றிக் காத்து வந்தாய். இவ்வாறு இல்லாதவர்க்கெல்லாம் உதவி செய்யும் இயல்புடைய இனியவன் நீ.

**இது நீ முன்செய்த தீவினையோ?**

இப்படியாக, இந்தப் பிறவியில் நீ செய்தது எல்லாம் எனக்குத் தெரிந்தவரை புண்ணியச் செயல்களே! அப்படி இருக்க, மாணிக்க மணி போலும் இளைய மனைவியுடன் இக்காட்டு வழி நடந்து நீ துன்பப்படுவது நீ முன் செய்த தீவினையின் பயனோ? என்று கோவலனிடம் மாடல்ல மறையவன் வினவினான்.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள அடைக்கலக் காதையின் வழியாக அறியலாகும் மாதரியின் பண்புநலன் பற்றியும் அடைக்கலம் தருவோர் பெறும் சிறப்புகள் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**மாதர் நல்லாள் மாதரி**

தரும சிந்தனை மிக உடைய துறவிகள் நிறைந்து வாழும் புறப்பகுதியான குடியிருப்பில் உள்ள பூப் போலும் கண்ணுடைய இயக்கி எனும் பெண் தெய்வத்துக்குப் பால் சோறு படையல் செய்து விட்டுத் திரும்பும் இடையர் குல மூதாட்டியான மாதரி என்பவள், எதிர் வந்த கவுந்தி அடிகளைக் கண்டு கை கூப்பி வணங்கினாள்.

**அடைக்கலம் கண்ணகிக்கு அருளுக**

பசுக்களைக் காத்துப் பராமரித்து அவைதரும் பயனைப் பிறர்க்குத் தந்துதவி வாழும் இடையர் குல மக்களின் வாழ்க்கை இனிதானது. ஓர் தீமையும் இல்லாதது. எனவே, இம் மாதரியும் தீயவளல்ல. நல்லவளே! வயதில் மூத்தவளான இவள் அன்பும் கருணையும் உடையவளாகவும் தெரிகிறாள். எனவே, மாதரியின் பாதுகாப்பில், கண்ணகியை விட்டுவைப்பதில் தவறு ஒன்றும் இல்லை என்று முடிவு செய்த கவுந்தி அடிகள் மாதரி நான் சொல்வதைக் கவனமாகக் கேள், ‘இந்தப் பெண்ணுடைய கணவரின் தந்தை பெயர் கேட்டால் இந்த மதுரை மாநகரில் வாழ்கின்ற அவனுடைய குலத்தைச் சேர்ந்த பெரும் தனவணிகர் எல்லாம் பெறுதற்கு அரிய பெரும் செல்வத்தைப் பெற்றது போல், இங்கு வந்து இவ்வழகிய கரும் கண்ணுடைய பெண்மணி கண்ணகியைத் தங்கள் வீட்டுக்கு விருந்தாக விரும்பி அழைத்துச் செல்வர். அப்படிப்பட்ட உயர்ந்த குலப் பெருமை உடைய இவளை அவர்கள் வந்து அழைத்துச் செல்லும்வரை உன்னுடைய அடைக்கலப் பொருளாக உன் பாதுகாப்பில் விட்டு வைக்கிறேன்’ என்று கூறினார்.

**தாயும் தோழியுமாகித் துணை இரு**

சீரும் சிறப்பும் உடைய செல்வ மகள் கண்ணகியைப் புனித நீரில் நீராடச் செய்து, அவளது அழகிய நீண்ட மீன்போலும் உள்ள கண்களுக்கு அஞ்சன மை தீட்டி, அழகிய கூந்தலுக்குப் பூவும் சூட்டி, தூய நல்ல ஆடை அணியச் செய்து,

அவளுக்குத் தோழியாகவும் தாயாகவும் இருந்து பாதுகாப்பளித்துக் காப்பாயாக. இங்கே என்னோடு வந்திருக்கிற பச்சிளம் கொடி போன்ற பாவை கண்ணகியின் அழகிய பாதங்கள் மண்ணில் பதியாத சிறப்புடையவை. அதாவது இவள் வீட்டைவிட்டு வெளியே சென்று அறியாதவள். இப்படிப்பட்ட இவள் இன்று, கொடிய வெப்பம் வருத்தத் தன் கணவனால் பெரும் துன்பத்துக்கு ஆளாகி, நா வறண்டுபோக, வழிநடந்து வந்திருக்கிறாள். தன் துயரைப் பெரிதாக எண்ணாத பெருமைக்குரிய பெண் இவள். தனக்கினிய துணையாகிய கணவனைக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு இன்றியமையாத கடப்பாடாக கற்பைத் தவிர வேறு எதையும் பொற்புடைச் செல்வமாகக் கொள்ளாத பெண் இவளைத் தவிர வேறு பெருமைக்குரிய பெண் தெய்வம் நான் கண்டதில்லை. இப்படிப்பட்ட கற்புடைய மகளிர் வாழும் நாட்டில், மழைவளம் குறையாது. நிலவளம் குறையாது. நாடாளும் மன்னர்கள் ஆட்சி நல்லபடியாக நடக்கும். இவற்றை எல்லாம் நீ அறிவாய் அல்லவா?

**தவத்தோர் அடைக்கலம் தலைசிறந்ததுவே**

அற உணர்வுடையோர் தருகின்ற அடைக்கலப் பொருட்களைக் காக்கின்ற செயல் சிறிதளவே ஆயினும் அதனால் பெறுகின்ற இன்பம் மிகப் பெரியது என்பதை நீ அறிய வேண்டும். அல்லாமலும், பூந்தோட்டங்கள் நிறைந்த காவிரிப் பூம்பட்டினத்துள், விரிந்த பூக்களை உடைய அசோக மரத்தின் குளிர் நிழலில், உலகம் சிறக்க என்று நோன்புத் தவமிருக்கும் துறவிகள் ஒன்று கூடி அமைத்த, ஒளிவீவும் சிலா வட்டத்தின் மேல் எழுந்தருளி அறவுரை கூறும் சாரணர்கள் முன்பாக, வானவில் போலும் ஒளிவீசும் உடல் உடையவனும் பூமாலை அணிந்தவனும் மணிமாலை சூடியவனும் பொன்னால் செய்த பூண்கள் அணிந்தவனும் இப்பூவுலகினர் காணமுடியாத தேவலோகத்தினர் கண்டு தொழுகின்ற வடிவம் உடையவனும் ஒரு பக்கத்துக் கை, கரிய விரல் உடைய குரங்கின் கைபோல் இருக்கப் பேராற்றல் உடையவனுமாக வந்து நின்ற தேவன் அவனைக் கண்டு துறவிகள் சாரணர்களைத் தொழுது இது யார்? இங்கிவன் வந்த நோக்கம் என்ன? என்று கேட்டனர். அதற்கு விடையாகச் சாரணர் தலைவன் பின்வருமாறு கூறினான்.

**தானத்தால் பெற்ற தெய்வ வடிவம்**

அவ்வாறு அவர்கள் கேட்டதற்கு விடையாகச் சாரணர் தலைவன் பின்வருமாறு கூறினான். புகாரில் வணிகருள் சிறந்தோருக்கு மன்னன் அளிக்கும் ‘எட்டி’ எனும் பட்டம் பெற்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சாயலன். அவனுடைய இல்லம் உண்ணா நோன்பிருப்பவர், நோன்பு முடிந்து, விருந்துண்ண வரும் துறவிகள் நிறைந்ததாயிருக்கும். இப்படிப்பட்ட சாயலன் வீட்டிற்கு ஒருநாள் பெருந்தவ முனிவர் வந்தார். அவரை சாயலனின்

மனைவி தனக்கு உற்ற குறைநீங்க எதிர்கொண்டழைத்து உணவளித்தாள். அப்போது அவ்வூரில் இருந்த சிறிய குரங்கு ஒன்று, பயந்த படியே அவ்வீட்டினுள் புகுந்து, அந்தத் தவ முனிவரின் அடி பணிந்து தொழுது, அம் மாமுனிவர் உண்டு மீந்த எச்சில் சோற்றையும் நீரையும் மிகுந்த விருப்போடு உண்டும் பருகியும் பசி ஆறியபின் அம் மாமுனிவர் திருமுகத்தை அன்போடு நோக்க, அதைப் புரிந்து கொண்ட குணக்குன்றாகிய மாமுனிவரும் அவ்வீட்டின் தலைவியாகிய சாயலனின் மனைவியைப் பார்த்து இக் குரங்கையும் உன் பிள்ளைகளைப் போலப் பாதுகாப்பாயாக என்றார்.

அத் தவமுனிவர் கூறிய அருள்மொழியை ஏற்று, அக் குரங்கினை வளர்த்து, அது இறந்த பின்பும் தான் தானம் செய்கிற போதெல்லாம் அக்குரங்குக்காகவும் அதன் தீவினை ஒழியத் தானம் செய்து வந்தனள். எனவே, அக் குரங்கு மத்திம நாட்டில் உள்ள வாரணவாசி என்னும் நகரில் வாழும் உத்தம கௌத்தன் என்பவனுக்கு மகனாய்ப் பிறந்து, அழகும் செல்வமும் அறிவும் சிறந்திருக்க வளர்ந்து தான தருமங்கள் மிகச் செய்து, முப்பத்து இரண்டாவது வயதில் உயிர் நீத்துத் தெய்வ வடிவம் பெற்றான். எனவே, பெற்ற செல்வத்தின் பெரும் பயன் பிறர்க்கு உதவி வாழ்வதும் தன்னைக் காத்தளித்துத் தருமம் செய்பவன் தந்த தானத்தின் சிறப்புமே ஆகும். இதை உணர்த்தவே முற்பிறவியில் கொண்டிருந்த குரங்கின் கை ஒரு பக்கமாக இருக்கச் சாயலனின் மனைவி செய்த தவத்தின் பயனால் இத் தெய்வ வடிவம் பெற்றேன். இதனை நீங்கள் அறிய வேண்டும் என்பதை, தவமுனிவர்களுக்கு எல்லாம் எடுத்துக் காட்டவே இத் தேவ குமாரன் இங்கு இப்போது தோன்றினான் என்று கூறினார்.

### தானம் தருவது பேரின்பம் பெறுவது

சாரணர் கூறிய இந்த இனிய நல்லுரையைத் தேவவாக்காகக் கொண்டு அவ்வூர் மக்கள் தானதருமங்கள் செய்தார்கள். தவசீலர்களும் தனக்கென வாழ விரும்பாத உலக நோன்பிகளும் சாயலனும் அவன் மனைவியும் தாங்கள் செய்த தானத்தின் பயனால் குறைவில்லாத இன்பம் உடைய பேரின்ப வீட்டை அடைந்தனர்.

### மாதரி மகிழ்ந்தாள்

‘தானம் செய்வதன் சிறப்பு என்ன என்பதை இப்போது கேட்டுத் தெரிந்து கொண்டாய் அல்லவா? எனவே, விரிந்து மணம் பரப்பும் மலர் சூடிய கூந்தலுடைய கண்ணகியோடு இன்னும் இங்கிருந்து வீண் பொழுது போக்காது, அவளை அடைக்கலப் பொருளாக ஏற்று அழைத்துச் செல்க’ என்று கவுந்தி அடிகள் கூற, மாதரியும் அதனைக் கேட்டு மகிழ்ச்சியுற்றாள். அந்த மாலைவேளையில் அழகிய கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை மாநகரின் காவல் மதிலைக் கடந்து தன் வீட்டினை அடைந்தாள் மாதரி.

**2. மணிமேகலை – ஆதிரை பிச்சை இட்ட காதை**

மணிமேகலை காப்பியத்தில் ஆதிரை பிச்சையிட்ட காதையில் சாதுவனைப் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. சாதுவனுக்கும் நாகர் தலைவருக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் குறித்து இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**துயில் நீங்கிய சாதுவன்**

ஆதிரையின் நிலை இங்கு இப்படியிருக்க அவள் கணவன் சாதுவன், கடற்கரையில் மிக உயர்ந்த மலையடிவாரத்திலுள்ள ஒரு மர நிழலை வந்து அடைந்தான். மேகங்களையுடைய பெரிய கடலில் சிக்கி வருந்திய துன்பம் மிகுந்து, இறந்தவனைப் போல உறக்கம் கொண்டான். அப்போது அச்சத்தினைத் தரும் அம் மலையில் வாழும் நக்க சாரணர் இனிமை இல்லாதவராய் அங்கு வந்தனர். சாதுவனின் அருகில் சென்று, ‘இவன் மிகவும் வருந்தியுள்ளான். தனியாக வந்துள்ளான். இரங்கத்தக்க நிலையில் இருக்கின்றான். புலால் பொதிந்த இவனது உடம்பு நமக்கு உணவாகும்’ என்று கருதி அவனை எழுப்பினர்.

**குருவிடம் செல்லுதல்**

சாதுவன் நாகரின் மொழியை ஐயமறக் கற்றவன். ஆதலின், அவர்களிடம் அவர்கள் மொழியில் பேசினான். கொடுந்தொழிலை உடைய நாகர் சற்றுத் தள்ளி ஒதுங்கி நின்று வணங்கி அவனுடன் பேசலாயினர். ‘மிக்க வலிமை உடையவனே, கேட்பாயாக! இங்கு எங்களுடைய குரு இருக்கிறார். அவரிடம் செல்வோம் வருவாயாக!’ என்று கூறினர். அவனும் அவர்களுடைய குருவைக் காண அவர்களுடன் சென்றான். கள்ளைக் காய்ச்சும் பானைகளும் மிகுதியான புலால் நாற்றமும் வெண்மையான உயர்ந்த எலும்புத் துண்டுகளும் கலந்துள்ள ஓர் இடத்தில், ஆண் கரடி தன் பெண் கரடியுடன் இருந்தாற்போல அந்தக் குருமகன் தன் மனைவியுடன் இருந்தான். சாதுவன் தன் பேச்சுத் திறத்தால் அவனைக் கவர்ந்தான். அவனது அன்புக்குரியவனானான். கிளைகள் ஓங்கிய ஒரு மரத்தின் நிழலில் அந்தக் குருமகன் அருகில் சென்று அமர்ந்தான்.

**குருமகன் உபசரிப்பு**

நாகர் குருமகன் சாதுவனை நோக்கி, “நீ இங்கு வரக் காரணம் என்ன?” என வினவினான். சாதுவன் அவனுக்குத் தான் அலை கடலில் பட்ட துன்பங்களை எடுத்துரைத்தான். குருமகன் தன் மக்களைப் பார்த்து, “அலைகடலில் துன்புற்ற இவன் உணவின்றி வருந்தியிருக்கிறான். நம்மால் இரக்கம் காட்டத் தக்கவன். ஆதலில், வாருங்கள் மக்களே! இந்த நம்பிக்கு இளமை பொருந்திய ஒரு

பெண்ணைக் கொடுத்து, விருப்பம் தரும் கள்ளையும் புலாலையும் வேண்டுமளவு கொடுங்கள்!” என்றான்.

**மறுப்பும் திகைப்பும்**

குருமகனின் உரையைக் கேட்ட சாதுவன், அதிர்ச்சியுற்று “கொடுமையான சொற்களைக் கேட்டேன். அவற்றை வேண்டேன்!” என்றான். “பெண்டிரும் உணவும் இல்லையானால் மக்களுக்கு இவ்வுலகத்தில் அடையக்கூடிய பயன் வேறேதேனும் உண்டோ? உண்டெனில் நாங்களும் அறியுமாறு சொல்வாயாக!” என்று சினத்துடன் கூறினான். ‘கூறுக’ என மீண்டும் அதட்டினான்.

**சாதுவனின் அற உரை**

சாதுவன், “அறிவை மயக்கும் கள்ளினையும் நிலையற்ற உயிர்களைக் கொல்லுதலையும் கலக்கமற்ற அறிவினையுடையோர் விலக்கினர். பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உறங்குவதும் உறங்கி விழிப்பதும் போன்றாகும். ‘நல்லறங்களைச் செய்கின்றவர்கள் இன்பம் எய்துதற்கு அரிய மேலுலகங்களை அடைதலும் தீமைகளைச் செய்கின்றவர்கள் தாங்கற்கரிய துன்பத்தைத் தரும் நரகங்களை அடைதலும் உண்மை! என உணர்தலால் மன வலிமை மிக்க அறிஞர்கள் அவற்றை நீக்கினர்! இவற்றை நீ அறிக” என்றான்.

**எப்படிச் சேரும்?**

அதனைக் கேட்ட குருமகன் பெருஞ்சிரிப்பு உடையவனாய், “ ‘உடலை விட்டுப் பிரிகின்ற உயிரானது வேறொரு வடிவத்தினை மேற்கொண்டு, பிறிதோர் இடம் சென்று புகும்’ எனக்கூறினாய். அவ் உயிர் எப்படிச் சென்று புகும்? அத் திறத்தினை விளக்கமாகக் கூறுக?” என்றான்.

**யாவரும் அறிவர்**

குருமகன் உரைகேட்ட சாதுவன், “சினம் கொள்ளாது இதனைக் கேட்பாயாக! உயிரானது இருக்கும்போது உடல் தன்னகத்தே இன்ப துன்பங்களை உணரும். அத்தகைய உடல், உயிரானது தன்னை விட்டுப் பிரிந்தால் வெட்டித் தீயில் இட்டாலும் தான் ஒன்றும் உணராது. எனவே, அவ் உடம்பிலிருந்து சென்றது ஒன்று உண்டு என்பதனை நீ அறிவாயாக! அப்படிச் சென்ற உயிருக்கு ஒரு புகும் இடம் உண்டு என்பதனை நான் மட்டுமன்றி யாவரும் அறிவர். உடம்பு இவ்விடத்தில் இருக்க, உயிர் பல காவத தூரம் கடந்து செல்லுதலைக் கனவிடத்தும் காண்பாய்! அவ்வாறே பிரிந்த உயிர் தன் வினைப் பயனை நுகர்தற்குரிய உடலிலே புகும் என்பதனை நீ தெளிவாக அறிவாயாக!” என்றான்.

**எமக்குரிய அறம் யாது?**

சாதுவனின் உரையினைக் கேட்ட குருமகன், சாதுவனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். பின், “கள்ளையும் புலாலையும் கைவிட்டால் இந்த உடம்பினுள் தங்கியிருக்கும் உயிரைப் பாதுகாக்கும் வகை அறியேன். வரையறை செய்யப்பட்ட வாழ்நாள் வரை, இறப்பு வரும் வரை எமக்கு ஏற்ற நல்ல அறங்களை எடுத்துக்கூறுக” என்றான்.

**சாதுவன் உரைத்த அற வழி**

சாதுவன் மகிழ்ந்து, “நன்று உரைத்தாய். இனி நல்ல வழியிலே செல்வாய். உனக்குப் பொருத்தமான அறத்தினைக் கூறுவேன். உடைந்த மரக்கலத்திலிருந்து மக்கள் தப்பி இங்கு வந்தால், அவர்களைக் கொல்லும் தொழிலைக் கைவிட்டு, அவர்களது அரிய உயிரைக் காப்பாற்றுக. முதுமையுற்று இறக்கும் விலங்குளைத் தவிர, பிற எவ்வுயிரிடத்தும் கொலைத் தொழிலை விலக்குவாயாக!” என்றான்.

**இவ் அறம் செய்வோம். ஏற்க இப்பரிசு!**

அதனைச் செவி ஏற்ற நாகர் தலைவன், “இந்த அறம் எங்களுக்குப் பொருத்தமானதே! இதனை நாங்கள் செய்வோம். உனக்கு ஏற்ற அரிய பொருள்களைக் கொள்வாயாக! முன்பெல்லாம் மரக்கலம் கவிழ்ந்தால் தப்பி வந்த மக்களை உண்டோம். அவர்களுடைய மிக்க பொருள்களே இவை. சந்தன மரக் கட்டைகள், மெல்லிய ஆடைகள், சிறந்த பொருட் குவியல்கள் ஆகிய இவற்றை எல்லாம் கொள்க” என்று கூறினான்.

**ஊர் திரும்பித் தானம் செய்தான்**

சாதுவன் அந்தப் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, சந்திரதத்தன் என்னும் வணிகனது மரக்கலத்தில் ஏறி இப் புகார் நகரை அடைந்தான். இந்தக் கற்புடைய செல்வி ஆதிரையுடன் வாழந்து தன் மனையிடத்தே நல்ல பல தானங்களையும் செய்தான்.

-----

**3. கம்பராமாயணம் – அயோத்தியா காண்டம் - குகப் படலம்**

கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள குகப்படலத்தின் வழியாக அறியலாகும் குகனின் பக்திச் சிறப்பையும் இராமனின் கருணைப் பண்பினையும் இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**குகனின் வருகை**

குகன் சிருங்கிபேரம் என்று சொல்லப்படுவதும் பேரலைகள் பெற்ற கங்கை ஆற்றின் பக்கத்திலே அமைந்துள்ளதுமான நகரத்தில் வாழும் வாழ்க்கையை உடையவன். அவன், முனிவர் இருப்பிடத்தில் தங்கியுள்ள இராமனைக் காண்பதற்காக, தேனையும் மீனையும் ஒருங்கே காணிக்கையாக எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

பொய் நீங்கிய மனத்தையும் இராமனிடம் அன்பு கொள்ளும் குணத்தையும் உடைய அந்தக் குகன், தன்னுடைய சுற்றத்தார் தூரத்தே நிற்க, கொல்லும் தன்மை உடைய அம்போடு கூடிய வில்லையும் நீக்கிவிட்டு, அரையில் கட்டிய வாளையும் நீக்கிவிட்டு இராமன் தங்கியிருந்த நல்ல தவச் சாலையின் வாயிலை அடைந்தான்.

### குகனை இலக்குவன் அறிந்து இராமனுக்கு அறிவித்தல்

வாயிலை அடைந்த குகன் தன் வருகையை உணர்த்தக் கூவிக் குரல் கொடுத்தான். முதலில் தம்பி இலக்குமணன் அவனை அணுகி, 'நீ யார்?' என்று வினவினான். குகன் அவனை அன்போடு வணங்கி, ஐயனே! நாய் போன்ற அடியவனாகிய நான் ஓடங்களைச் செலுத்தும் வேடன் ஆவேன். தங்கள் திருவடிகளைத் தொழ வந்தனன்' என்று கூறினான்.

இலக்குமணன், 'நீ இங்கேயே இரு' என்று குகனிடம் கூறிவிட்டு, தவச் சாலைக்குள் சென்று தமையன் இராமனைத் தொழுது, 'அரசே! தூய உள்ளம் பெற்றுள்ளவனும் தாயைக் காட்டிலும் மிக நல்லவனும் அலைமோதும் கங்கையில் செல்லும் ஓடங்களுக்குத் தலைவனுமான குகன் என்னும் ஒருவன் உங்களைக் காண்பதற்காகப் பெருந்திரளாகக் கூடியுள்ள சுற்றத்தாரும் தானுமாக வந்துள்ளான்' என்று தெரிவித்தான்.

### இராமனை குகன் வந்து வணங்கி நிற்றல்

இராமனும் மனமுவந்து, 'நீ அந்தக் குகனை என்னிடம் அழைத்து வா' என்று கூறினான். அதன்படி நற்குணங்களைப் பெற்றவனான இலக்குமணன் சென்று 'உள்ளே வா' என்று குகனை அழைத்தான். அதைக் கேட்ட மிகுந்த அன்பு கொண்டவனான குகன் விரைவாக உள்ளே சென்று, கண்ணழகு பெற்ற இராமனைத் தன் கண்ணினால் கண்டு களிப்படைந்தான். கருமை நிறத்து மயிர் முடி தரையிலே படுமாறு அவனை வணங்கி, எழுந்து, உடல் வளைத்து, வாயினைக் கையினால் பொத்திக் கொண்டு நின்றான்.

### கையுறைப் பொருளை அறிவித்தல்

'இங்கே அமர்க' என்று குகனிடம் இராமன் கூறினான். ஆனால், குகன் அமரவில்லை. இராமனிடம் அளவு கடந்த அன்பை உடைய அந்தக் குகன்,

இராமனை நோக்கி, ‘தங்கள் உணவாக அமையும்படி தேனையும் மீனையும் பக்குவப் படுத்திக்கொண்டு வந்துள்ளேன். தங்களுடைய எண்ணம் யாதோ?’ என்று கேட்டான். இ௹மன், மூத்தோராகிய முனிவரை நோக்கிப் புன்னகை செய்தவாறு பின்வருமாறு சொல்லத் தொடங்கினான்.

**விடியலில் நாவாயுடன் வருக**

‘மனம் மகிழும்படி உள்ளத்திலே உண்டான அன்பின் தூண்டுதலால் பக்தி ஏற்பட, அருமையானவையாய்க் கொண்டு வரப்பட்டவை இத்தேனும் மீனும் என்றான். இவை அமிழ்தைக் காட்டிலும் சிறந்தவை அல்லவா? நீ கொண்டு வந்தவை எவையாயினும் சரி, அவை அன்போடு பொருந்தியவை என்றால், தூய்மையானவையே! அவை எம்மைப் போன்றவர்கள் ஏற்கத் தக்கவையே. ஆதலால், நாம் அவற்றை இனிதாக உண்டவர் போல் ஆனோம்’ என்று குகனிடம் இராமன் கூறினான்.

ஆண் சிங்கம் போன்றவனான இராமன் மேலும் சொல்லலானான். ‘நாம் இன்று இத் தவச்சாலையில் தங்கி, நாளை அலை மோதும் கங்கையைக் கடப்போம். எனவே, நீ, அழகு மிகுந்த நின் சுற்றத்தாரோடு இங்கிருந்து சென்று, உன்னுடைய நகரத்திலே உவகையோடு இனிதாகத் தங்கி, விடியற்காலை நாங்கள் ஏறிச் செல்வதற்குரிய ஓடத்துடன் இங்கே வருக’ என்றான் இராமன்.

‘அடிமை செய்வேன்’ என்று குகன் வேண்டுதல்

மேகத்தின் நிறத்தை உடைய இராமன் இவ்வாறு கூறியதும், அவனிடம் பேரன்பு கொண்ட குகன், தன் கருத்தைத் தெரிவிப்பவனாய், ‘இவ்வுலகம் முழுவதையும் உனக்குரிய செல்வமாக உடையவனே! உன்னை இந்தத் தவவேடத்தில் பார்த்த என் கண்களைப் பறித்து எறியாத கள்ளனாகிய நான், இந்தத் துன்பத்தோடு உன்னைப் பிரிந்து எனது இருப்பிடத்தை நோக்கிச் செல்ல மாட்டேன். ஐயனே! இங்கிருந்து, என்னாலான அடிமைத் தொழிலை உனக்குச் செய்கிறேன்’ என்றான்.

மாலை சூட்டப்பட்ட வில்லை உடைய தலைவனாகிய இராமன், அந்த குகன் கூறிய கருத்தைக் கேட்டான். உடனே, சீதையின் முகத்தை நோக்கி, இலக்குமணனின் திருமுகத்தை நோக்கி, அவர்கள் மனமும் குகனின் அன்பை ஏற்றுக்கொள்வதை அறிந்து, ‘இவன் நம்மிடம் நீங்காத அன்புடையவன் ஆவான்’ என்று கூறி, கருணையினால் மலர்ந்த கண்கள் உடையவனாகி, ‘எவற்றினும் இனிமையான நண்பனே! நீ விரும்பியவாறு இன்று என்னோடு தங்கியிரு’ என்று குகனிடம் கூறினான்.

‘மனுகுலத்தில் வந்த மன்னனே! நீ அழகிய அயோத்தி நகரத்தை விட்டு இங்கு வந்த காரணத்தைத் தெரிவிப்பாபயாக’ என்று குகன் கேட்டான்.

இலக்குமணன், இராமனுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொல்ல, அதைக் கேட்டு இரங்கியவனான குகன், மிக்க துன்பமுற்று, 'பெரிய நிலத்துக்கு உரியவளான பூமி தேவி தவம் செய்தவளாக இருந்தும், அத் தவத்தின் பயனை முழுவதும் பெறவில்லை போலும், ஈதென்ன வியப்பு!' என்று கூறி, இரண்டு கண்களும் அருவி போலக் கண்ணீர் சொரிய அங்கே இருந்தான்.

**நாவாய் கொணருமாறு கூறுதல்**

பகைவருக்கு அச்சம் தருவதும் தோளிடத்தில் பொருந்தியதுமான வில்லை உடைய இராமன், விடியற்காலையில் செய்ய வேண்டிய கடமைகளை விருப்பத்தோடு செய்து முடித்து, முனிவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து வர அங்கிருந்து புறப்பட்டான். அடிமையாளாக முதலிலே அமைந்துவிட்ட அன்புடைய குகனை நோக்கி, 'ஐயனே! எம்மைக் கொண்டு செல்வதற்குரிய ஓடத்தை விரைவாகக் கொண்டு வருக' என்று கூறினான்.

**கங்கையைக் கடத்தல்**

இராமனின் கருத்தை அறிந்த குகன் விரைவாகச் சென்று பெரிய படகு ஒன்றைக் கொண்டு வந்தான். தாமரை மலர் போலும் கண்களை உடைய இராமன், அங்கிருந்த முனிவர்களான அந்தணர்கள் அனைவரிடமும் விடை தருக என்று கூறிக் கொண்டு, பிறைச் சந்திரனைப்போன்ற நெற்றியைப் பெற்ற சீதையோடும் இலக்குமணனோடும் அப்படகில் இனிதாக ஏறினான்.

'ஆற்றிலே படகை விரைவாகச் செலுத்து' என்றான் இராமன். அந்த இராமனுக்கு உண்மையான உயிர் போன்றவனான குகனும் மடங்கும் அலைகளை உடைய கங்கை ஆற்றிலே செலுத்திய பெரிய படகு விசையாகவும் இள அன்னம் நடப்பதைப்போல அழகாகவும் சென்றது. கரையில் நின்றவர்களான முனிவர்கள், இராமனைப் பிரிந்த துயரத்தால் நெருப்பிலே பட்ட மெழுகைப் போல மனம் உருகினார்கள்.

பாலைப் போன்ற இனிய மொழி பேசும் சீதையும் சூரியனைப் போன்ற இராமனும் சேல் மீன்கள் வாழும் கங்கையின் புனித நீரை அள்ளி எடுத்து, ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடிக் கொண்டிருக்க, நுனியில் தோலை உடைய நீண்ட கோலினால் நீரைத் துழாவிச் செலுத்தப்பட்ட அந்தப் பெரிய படகு, பல கால்களை உடைய பெரிய தண்டு போல விரைவாகச் சென்றது.

சந்தனத்தை அணிந்துள்ள மணற் குன்றுகளாகிய பெரிய கொங்கைகளை உடைய சிறந்த கங்காதேவி, ஒளி வீசும் மாணிக்க மணிகள் மின்னுவதால், நறுமணம் வீசும் தாமரை மலரைப் போலச் செந்நிறவொளி பரவப் பெற்ற தௌ;ளிய அலைகள் என்னும் நீண்ட கைகளால், தான் ஒருத்தியே அப்படகை ஏந்தி அக்கரையில் சேர்ந்தனள்.

**சித்திரக் கூடத்திற்குச் செல்லும் வழி கேட்டல்;**

கங்கையின் மறு கரையை அடைந்த இராமன் தன்னிடம் அன்பு கொண்ட குகனை நோக்கி, ‘சிததிரக் கூடத்துக்குச் செல்லும் வழியைச் சொல்லுக’ என்று கேட்டான். இராமனிடம் கொண்ட பக்தியினால் தன் உயிரையும் கொடுக்கும் உள்ளன்பு உள்ளவனான குகன், இராமனின் திருவடிகளை வணங்கி, ‘உத்தமனே! அடிமைப்பட்ட நாய் போன்றவனாகிய நான் உங்களிடம் சொல்ல வேண்டியது ஒன்று உள்ளது’ என்றான்.

**ஐவர் ஆனோம்**

அத்தகைய அன்புகொண்ட குகன் கூறியவற்றைக் கேட்ட குற்றமற்றவனான இராமன், அவனுக்கு மறுமொழி உரைப்பனவாய், ‘நீ என் உயிர் போன்றவன். என் தம்பி இலக்குமணன், உனக்குத் தம்பி. ஆழகிய நெற்றியைப் பெற்ற இச்சீதை, உனக்கு உறவினள். குளிர்ந்த கடலால் சூழப்பட்ட இந்நாடு முழுவதும் உன்னுடையது’ என்றான்.

‘துன்பம் உள்ளதால் அல்லவா? சுகமும் உள்ளதாகும். அவ்வாறு நினைப்பதல்லாமல், பின்னே உள்ளதாகப் போகின்ற, இப்போது இணைந்திருப்பதற்கும் வன வாசத்திற்குப் பின் இணைந்திருக்கப் போவதற்கும் இடைப்பட்டதான, பிரிவு என்னும் துன்பம் உள்ளதே என்று எண்ணாதே. உன்னைக் கண்டு தோழமை கொள்வதற்கு முன்னே, உடன் பிறந்தவர்களாக நாங்கள் நால்வர் இருந்தோம். இப்போது, முடிவு உள்ளது என்று நினைப்பதற்கு முடியாத எல்லையற்ற அன்புடைய உடன்பிறந்தார்களாகிய நாம் ஐவர் ஆகிவிட்டோம்’ என்றான் இராமன்.

‘ஒளி வீசும் கூரிய வேலை உடையவனே! நான் காட்டில் வாழும் காலமெல்லாம், உன் தம்பியாகிய இலக்குமணன் என்னுடன் இருக்கப் போகிறான். எனவே, என்னைத் துன்புறுத்தும் வகைகள் எவை? ஒன்றும் இல்லை. உன் இருப்பிடத்திற்குச் சென்று, நான் இருந்து மக்களைக் காப்பது போலக் காப்பதற்கு உரியன் நீ. வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்ப வடக்கு நோக்கி வரும் அந்த நாளில், உன்னிடம் உறுதியாக வருவேன். நான் சொன்ன சொல் தவற மாட்டேன்.’

‘உன் தம்பியாகிய பரதன், அயோத்தியில் உள்ள சுற்றத்தாரைக் காப்பதற்கு ஏற்ற தகுதியோடு இருக்கிறான். நீ என்னுடன் வந்துவிட்டால், இங்குள்ள சுற்றத்தாரைக் காப்பாற்ற யார் இருக்கிறார்கள்? நீயே சொல். உன் சுற்றத்தார், என் சுற்றத்தார் அல்லவா? அதனால் அவர்கள் தம்மைக் காப்பாற்றுவார் இல்லாமல் மிகுந்த துன்பத்தை அடைதல் தகுமா? இங்குள்ள என்

சுற்றத்தாரை என் கட்டளையை ஏற்று இனிதாகக் காப்பாயாக' என்றான் இராமன்.

'இராமன் இட்ட கட்டளையை மீறாதவனும் அவனைப் பிரிவதால் உண்டான துன்பத்திலிருந்து நீங்காதவனும் நோய் கொண்டவன் என்று பிறர் நினைக்குமாறு பிரிவுத் துன்பத்தை உடையவனுமான குகன் இராமனிடம் விடைபெற்றுக் கொண்டான். பின்பு, இராமனும் இலக்குமணனும் அழகிய ஆபரணங்களை அணிந்த மயிலைப் போன்ற சீதையோடு, அடர்ந்த மரங்கள் நிறைந்த காட்டில் நெடுந்தூரம் செல்வதற்குரிய வழியிலே நடந்து சென்றார்கள்.

**4. பெரியபுராணம் – முதற் காண்டம் - இலை மலிந்த சருக்கம்**

பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள கண்ணப்ப நாயனார் புராணம் வழியாக அறியலாகும் இறைவனின் திருவிளையாடலை விரிவாக இங்குக் காண்போம்.

**இறைவனின் விருப்பம்**

அன்றிரவு அவரது கனவில் செஞ்சுடர் வண்ணர் எழுந்தருளினார். இச்செயலை யாரோ வேடுவன் வேண்டுமென்றே, என்னை இழிவுபடுத்த வேண்டும் என்பதற்காகச் செய்கிறான் என்று மட்டும் எண்ணி விடாதே. அவனது வடிவமெல்லாம் எப்பொழுதும் நம் பக்கம் அன்பு செலுத்தும் தன்மையானதே. அவனுடைய அறிவும் உணர்வும் நம்மை அறியும் அறிவே! அவனுடைய செயல் ஒவ்வொன்றும் நமக்கு இனிமை பயக்கக்கூடியதாகும். அவனது செருப்புக் கால்கள் என் மீது தேய்த்துச் சுத்தப்படுத்தும் போது எனக்கு மழலைகளின் சேவடிகள் தடவிச் செல்வது போன்ற இன்பப் பெருக்கை ஏற்படுத்துகிறது.

கங்கை, காவிரி முதலிய தூய நதிகளின் நீரைவிடத் தூய்மையான அவன் தனது வாயினின்றும் உமிழ்கின்ற திருமஞ்சன நீர். அவனது முடியிலிருந்து உதிர்ந்து விழும் நறுமலர்கள், அவன் எம்மீது கொண்டுள்ள உயிருக்கு உயிரான அன்பு மலர்ந்து, நம்மீது நழுவி விழுவதைப் போலாகும், அம்மலர்களுக்குத் தேவதேவாதியர்கள் இடும் பாரிஜாத மலர்கள் கூட ஒவ்வா. அவன் ஊட்டும் இறைச்சி மறை விதிப்படி அளிக்கும் அவிர்பாகத்தைவிடச் சிறந்ததாகும். வேத முனிவர்கள் ஓதும் தோத்திர நாமங்களை விட, அவன் அகம் குளிர அன்புருகிக் கூறும் மொழிகளே மிகமிக நல்லவை. எனக்கு இன்பம் தரத்தக்கவை. அவனது இத்தகைய உயர்நத அன்புச் செயலை உனக்குக் காட்டுகிறேன். இதற்காகக் கலங்காதே என்று திருவாய் மலர்ந்தார் எம்பெருமான்! சிவகோசரியார் கனவு கலைந்து திடீரென்று விழித்தெழுந்தார்.

எம்பெருமானைப் போற்றி நிலத்தில் வீழ்ந்து வணங்கினார். அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அதன் பின்னர் உறக்கம் எப்படி வரும்! கனவில் கண்ட பெருமானின் திருக்கோலத்தை எண்ணியபடியே விடியும் வரை

விழித்திருந்தார். அன்று ஆறாம் நாள்! வழக்கம்போல் திண்ணனார் வேட்டைக்குப் புறப்பட்டார். அந்தச் சமயத்தில் அந்தணர் மன நிறைவோடு திருக்கோயிலுக்கு வந்தார். வழக்கப்படி வேதாகம வழிபாடுகளைச் செய்தார். அதன் பிறகு இறைவன் கனவில் எழுந்தருளி மொழிந்ததற்கு ஏற்பச் சிவலிங்கத்தின் பின்புறமாக ஓரிடத்தில் மறைந்து கொண்டார்.

**இறைவனின் திருவிளையாடல்**

வழக்கம்போல், தொன்னையில் இறைச்சியும், தலையில் நறுமலரும், வாயில் பொன்முகலி ஆற்றுத் தெளிந்த நீரும் எடுத்துக் கொண்டு திண்ணனார் திருச்சன்னிதிக்குள் வந்தார். திண்ணனாரின் பக்தியை உலகோர்க்கு உணர்த்தவும், இறைவன் மீது கொண்டுள்ள அன்பை சிவகோசரியாருக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் வேண்டி குடுமித் தேவர், அந்த ஆனந்தமலை மீது ஓர் அற்புத விளையாடலைத் தொடங்கினார். எம்பெருமான், தமது சிவலிங்கத் திருமேனியில் வலக்கண்ணில் இருந்து இரத்தம் வடிவதைப் போல் காட்டினார்.

சிவபெருமானுடைய திருவிழிகளிலிருந்து குருதி கொட்டுவது கண்டு மதிமயங்கிய திண்ணனார் செயலிழந்தார். வாயிலிருந்த பொன்முகலியாற்று நீர் கீழே விழுந்து சிதறியது. வில்லும் கீழே நழுவின. குடுமியில் சுமந்து வந்த நறுமலர்கள் சோர்ந்தன. அருள் மிகுதியால் நிலை தளர்ந்த திண்ணனர் பதை பதைத்துக் கீழே விழுந்தார். அவரது உள்ளமும், உடலும் நடுங்கியது. நடுக்கத்தால் உடல் வியர்த்தது. அவர் கண்ணீர் வடித்தார்! கதறினார்! திடுக்கிட்டு எழுந்தார். எம்பெருமானின் குருதி வழியும் திருக்கண்ணை தமது கையால் துடைத்தார். குருதி மட்டும் நின்றபாடில்லை. செய்வதறியாது, செயல் மறந்து நிலத்தில் வீழ்ந்தார்.

மீண்டும் எழுந்தார். எம்பெருமானுக்கு இத்தகைய கொடிய துன்பத்தை செய்தது யார்? காட்டு விலங்குகளானாலும் சரி, மாறாக வேடர்கள் ஆனாலும் சரி, என் ஐயனுக்கு இப்படியொரு துன்பத்தைக் கொடுத்ததை மட்டும் என்னால் பொறுக்கவே முடியாது. இப்பொழுது பழி வாங்கி வருகிறேன் என்று கர்ஜித்த திண்ணனார் கோபத்துடன் எழுந்தார். வில்லும் அம்பும் எடுத்தார். வில்லில் நாணேற்றி குன்றின் சாரலில் அங்குமிங்குமாக நெடுந்தூரம் தேடித் தேடி அலைந்தார். தேடிய இடங்களிலெல்லாம் விலங்குகளையோ வேடர்களையோ காணாது வேதனையோடு திரும்பி வந்தார். எம்பெருமானின் இரத்தம் சிந்தும் விழிகளைப்ப பார்த்து ரத்தக் கண்ணீர் வடித்தார். குடுமித்தேவரை இறுகக் கட்டித் தழுவினார்.

அன்பும் அருளும் இணைந்தன. பக்தியும், சக்தியும் கலந்தன. வேடர்கள் மூலிகைகளைக் கொண்டு புண்களை ஆற்றுவது திண்ணனார் நினைவிற்கு வந்தது. உடனே காளத்தி மலை அடிவாரத்திற்குச் சென்று தமக்குத் தெரிந்த சில

பச்சிலை மூலிகைகளைப் பறித்து வந்தார். அப்பச்சிலைகளைக் கசக்கிப் பிழிந்து சாற்றை இறைவன் திருவிழிகளில் பிழிந்தார். அப்படியும் பெருகி வந்த இரத்தம் மட்டும் சற்று கூட நிற்கவே இல்லை. அந்த சமயத்தில், ‘ஊனுக்கு ஊனிடல் வேண்டும்’ என்ற ஆன்றோர்களின் சித்தாந்த மொழி அவரது சிந்தைக்கு எட்டியது. எம்பெருமானுடைய விழிக்கு நேர்ந்த விபத்தைத் தீர்ப்பதற்கு, தம்முடைய விழிகளில் ஒன்றைத் தோண்டி எடுப்பது இரத்தம் சிந்தும் இறைவனின் திருவிழிகளில் வைப்பது என்ற கருத்தினைக் கொண்டார் திண்ணனார்.

சற்றும் தாமதிக்காமல் கூரிய அம்பினால் தமது வலக்கண்ணைத் தோண்டி எடுத்தார். காளத்தி அப்பனின் ரத்தம் வழியும் வலக்கண்ணில் அப்பினார் திண்ணனார். அக்கண்ணில் இருந்து ரத்தம் வழிவது நின்றது. திண்ணனாரின் கண்களிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அவர் அதைச் சற்றும் பொருட்படுத்தவில்லை. வேதனையைப்பற்றி சற்று கூட எண்ணிக் கதறவில்லை. தாம் தக்க சிந்தனையோடு செய்த செயல் பரமனின் கண்களைக் குணப்படுத்திவிட்டதே என்ற களிப்பில் மலையை ஒத்த தமது தோள்களைத் தட்டிக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினார். திண்ணனாரின் தெளிந்த பேரன்பின் பெருக்கினை மேலும் சோதிக்க தொடங்கிய சிவனார். தமது இடக்கண்ணிலிருந்தும் ரத்தம் வழியுமாறு செய்தார்.

ஆனந்தக் கூத்தாடிக் களித்து நின்ற திண்ணனார் இறைவனின் இடக்கண்ணிலிருந்து ரத்தம் பெருகி வருவது கண்டு, அப்படியே அசைவற்று நின்றார். கண்ணுக்குக் கைகண்ட மருந்தைக் கண்ட பின்னர் திண்ணனார் எதற்காக கண்ட கண்ட மூலிகைகளையும் பச்சிலைகளையும் தேடி அலையப் போகிறார்! அக் கண்ணிலிருந்து வரும் இரத்தத்தையும் தடுத்து நிறுத்த அப்பொழுது தமது மறுகண்ணையும் அம்பினால் தோண்டி எடுத்து அப்புவது என்ற முடிவிற்கு வந்தார். மறுகண்ணையும் எடுத்துவிட்டால், இறைவனது கண் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடுமே என்று நினைத்து தமது காலை, இறைவனின் குருதி கொட்டும் இடக் கண்ணருகே பலமாக ஊன்றிக் கொண்டார். அம்பை எடுத்தார். அம்பு எடுத்த அன்பர், காளத்தியப்பரை அன்பின் பெருக்கிலே ஒருமுறை பார்த்தார். இந்தக் கண்ணையும் பறித்து இறைவனுக்கு வைத்து விட்டால் பிறகு இறைவனைக் கண்ணால் பார்க்கவே முடியாதே - அன்பு வடிவமான இறைவனின் அருள் முகத்தைக் காணவே முடியாதே? என்று எண்ணினாரோ என்னவோ, இறைவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பார்த்துப் பார்த்து மனம் உருகினார். இனிமேல் என்றும், எப்பொழுதும், ஞானக்கண்களால் இறைவனைக் கண்டுகளிக்கப் போகும் திண்ணனார். தமது ஊனக் கண்களைப் பற்றி கவலைப்படவில்லை. அம்பை எடுத்தார். இடக்கண்ணில் ஊன்றி கண்ணைத் தோண்டப் போனார். இதற்கு மேல்

காளத்தியப்பர். தமது அன்புத் தொண்டனைத் துன்புறுத்த விரும்பவில்லை. திண்ணனாரைத் தடுத்தாட் கொள்ள நினைத்தார்.

எம்பெருமான் தமது திருக்கையால் திண்ணனாரின் கரத்தைப் பற்றினார். நிற்க கண்ணப்ப! நிற்க கண்ணப்ப! அன்புருவே நிற்க! என்று தமது அமுத வாக்கால் திருவாய் மலர்ந்து அருளினார் எம்பெருமான். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். ஆலயம் எங்கும் புத்தொளி பிறந்தது. வேதம் முழங்கியது. திண்ணனார் இறைவனின் அருளிலே அன்பு வடிவமாய், பேரின்பப் பெருக்கெடுத்து நின்று கொண்டிருந்தார்.

**பூஜை மட்டுமல்ல, உண்மையான அன்பு**

இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த சிவகோசரியார் திண்ணனாரின் பக்திக்குத் தலை வணங்கினார். இறைவன் திருவருளினாலே திண்ணனார், இழந்த கண்ணைப் பெற்றார். கண் பெற்றதோடு கண்ணப்பர் என்ற திருநாமத்தையும் பெற்றார். கண்ணப்பரின் உண்மையான பக்தியையும், இறைவனின் திருவருளையும் என்ணிப் பார்த்தார் அந்தணர். ஆயுள் எல்லாம் அரனாரை வழிபட்டேன். என்னால் அவரது அருளைப்பெற முடியவில்லை. ஆறுநாள் பூஜையிலே ஆண்டவனின் அருகிலேயே இருக்கும் இன்பப் பேற்றினைப் பெற்றார் திண்ணனார்.

அதற்குக் காரணம் வெறும் பூஜை மட்டுமல்ல! உண்மையான அன்பு தான். அன்பே சிவமானார். அன்பில்லாத வழிபாட்டால் ஒரு காரியமும் நடக்காது. இறைவனின் அருளைப் பெறவும் முடியாது. இம்மையில் யாம் முக்தி பெற, இனிமேல் காளத்தியப்பரோடு கண்ணப்பரையும் சேர்த்து வழிபடுவதே சிறந்தது! என்று உறுதி பூண்டார் வேதியர். நிலத்தில் வீழ்ந்து வணங்கினார். அருந்தவத்தோர்க்கும் கிட்டாத பரம்பொருளாகிய எம்பெருமான் திருவாய் மலர்ந்து, ஒப்புயர்வற்ற கண்ணப்பா! நீ எமது வலப்பக்கத்திலே எப்பொழுதும் நிற்பாயா! என்று திருவருள் புரிந்தார். திண்ணனார் கண்ணப்பர் ஆனார். கண்ணப்பர் பரமனுக்குக் கண்கொடுத்து பக்திக்குக் கண்ணாக விளங்கினார்.

**5. தேம்பாவணி – இரண்டாம் காண்டம் - நீர்வர மடைந்த படலம்**

தேம்பாவணியின் இரண்டாவது காண்டத்தில் இடம்பெற்றுள்ள நீர்வர மடைந்த படலத்தில் சுட்டப்பெற்றுள்ள செய்திகளை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**தடாகத்தை நெருங்குதல்**

விண்மீன்களைச் சொரிந்து அமைத்த முடியை அணிந்து ஒளிரும் தாயாகிய மரியாளும், தேனைச் சொரிந்த மலர்க்கொடி ஏந்திய அழகிய வரங்களின்

ஆற்றல் கொண்ட சூசையும், நான் செய்த பாவங்களைத் தீர்க்க அவதரித்து வந்த குழந்தை நாதனை ஏந்தியெடுத்துக் கொண்டு, வழியில் மணம் பொழிந்த ஒரு மலர்த் தடாகத்தைக் கண்டு, அதன் அருகே சென்றனர்.

மக்களிடம் பொருந்திய பாவங்களைத் தீர்க்கும் அம்மூவரும் அதன் கரையில் தங்கினர். அப்பொழுது, அழகெல்லாம் ஒருங்கே பொருந்திய திருமகனைத் துதி பாடுவனவாக, தொகையால் மிகுந்து அடக்கங்கொண்ட குயில்கள் பாடுதலினால், தேன் உள்ளடங்கக் கொண்ட மலர்கள் விரிந்து இன்புறுதலைத் தாம் கண்டனர்.

**தடாகத்தின் எழில்;**

கரைமேல் இருந்த இம்மூவர் நமக்குக் காட்டும் அருள் போல, அங்கு வரிசையாய் நின்ற நிழல் கொண்ட நெடிய மரங்களெல்லாம் மணம் பொருந்திய தம் மலர்களை விரித்த போது, அவற்றின் தேன் துளிகள் நுண்ணிய மணல் மீது நுரை நுரையாய்க் கிடந்தன.

விண்மீன்களை அணிந்த கூந்தலையுடைய மெல்லிய கொடி போன்ற மரியாள் பெற்ற காளையாகிய குழந்தைநாதன் கொண்டிருந்த முகத்தின் அழகைக் காணும் பொருட்டு, வாளை மீன்களைக் கொண்ட ஊற்று நீருள்ள தடாகம் மலர்ந்து, தண்டைக் கொண்டுள்ள கருங்குவளை மலர்களைத் தன் கண்களாகக்கொண்டு நோக்கும்.

சொல் என்னும் அணிகலத்தில் அடங்காது உயர்ந்த அம் மூவரும் சுவையோடு அருந்துமாறு, பொற்கலத்தில் அமுதைப் பொழிந்து தருவார்போல், வில்லொளி பரப்பும் அணிகள் போல் ஒளிரும் பூக்கள், விரித்த தம் இதழ்களாகிய கலங்களில் தேனை நிறைவாக ஏந்தித் தந்தன.

**மரியாளின் அற்புதச் செயல்**

நான் பொருந்தக் கொண்ட பாவங்களைத் தீர்க்க வந்த அருள் கொண்ட அந்நல்லோர், மணம் பொருந்திய கனிகளைக் கனிவோடு உண்டு, வானத்திற் பொருந்திய மீன்கள் போன்ற மலர்கள் பொழிந்த தேன் கலந்த இனிய தாடகத்துத் தெளிந்த நீரை அருந்தினர்.

அணிகலன் போன்ற ஒளி பொருந்திய கைகளைக் கொண்ட நல்லவளாகிய மரியாள், மாணிக்க நிறம் கொண்ட தன் அழகிய மகனைப் பொதியும் அழகிய நிறமுள்ள நுரைபோல் மெல்லிய பஞ்சு நூல் ஆடையை, மகுடம் போல் மலர்களைப் புனைந்து நின்ற அத்தடாகத்தில் நனைத்துத் துவைத்தாள்.

**தடாகம் பெற்ற வரம்**

மரியாள், தன் மகனின் ஆடையைத் தன்னில் தோய்ந்த தன்மையால், அந்தத் தடாகத்து நல்ல நீரை யாரும் உண்ட தன்மையால் கொடிய நோய்கள் யாவும் வாய்ந்த தன்மையொடு மாறவும் ஆண்டவன் வரம் தந்த தன்மை கொண்டுள்ளது. அவ்வரம் இன்றும் குறையாது நிலை பெறுகின்றது.

நறுமணம் பொருந்திய இனிய நீருள்ள ஆழமான அத்தடாகம், அது ஆண்டவன் அருளால் பெருகிய வரமென்று உணர்ந்து, அத்தெளிவினால் பொங்கி, சுருட்டி எழும் திரைகள் சூழ்ந்துள்ள கரைகளில் மோதின. அத்தோற்றம், பொன் போல் சிறந்து விளங்கும் அம்மூவர் அடிகளை அத்திரைகள் போற்றுவது போல் இருந்தது.

அலைகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தமக்குள் அசைந்தாடிய தன்மையால், இலைகளிடையே இடமெங்கும் விரிந்து நின்ற அழகிய மலர்கள் சேர்ந்து ஆடவே, தன் தலை மீது தன் கைகளையெல்லாம் ஒருங்கே ஏற்றித் தொழுத நிலையை ஒருங்கே காட்டியது அத்தடாகத்தின் அத்தன்மையான தோற்றம்.

**பறவைகளின் மகிழ்ச்சி**

பால் போன்ற இளங் கதிர் தோன்றிய அழகிய நிறை மதி போன்ற திருமகன் முகத்தில் வானம் தரும் மென்மையான பனியைப் போன்ற தேனைப் பெரிய மரங்கள் வடித்து நிற்க, தேன் போன்ற இளங் குரலோடு இள வண்டுகள் பாடல்களை இசையோடு பாடிக் கொண்டிருக்க, விண்மீன் போன்ற இளஞ் சிறகு கொண்ட கரு மயில்கள் மிகுதியாகக் கூடி நின்று நடனமாடின.

கயல் மீன் போன்ற கண்களைக் கொண்ட களிப்புள்ள மகளிர், கரிய வான் மேகம் போன்ற தடாகத்துத் திரையுள்ளே களித்து விளையாடின ஒப்புமை கண்டு, அவ்வியல்புக்கு ஏற்றவாறு, அத்தடாகத்துள் திரியும் இறகு கொண்ட அன்னம் போன்ற உயிரினங்களும், அகலமான தம் சிறகுகளை விரியவிட்டு, அம்மூவர்க்கும் அயலே இனிதாய் விளையாடிக் கொண்டிருந்தன.

பல வகைப் பிற பறவைகளும், நாரைகளும், கொக்கு இனங்களும். அழகில் பிறவெல்லாம் ஒவ்வாதன என்று புகழ்ந்து சொல்லப்படும் தன்மை கொண்ட அன்னங்களும், பகையினின்று விலகியதும் களிப்பு விளைவிப்பதுமான ஒரு போரை நினைந்த வண்ணமாகவும், ஒன்றையொன்று நெருங்கும் தன்மையாகவும், குதிக்கும் தன்மையாகவும் அங்கு உள்ளன. அவை குதிக்கும் குதிரை போல் அங்கு வந்து, அம்மூவர்க்கும் எதிரே தொடர்ந்து வந்து நெருங்கி நிற்கும்.

தேன் நிறைந்த குவளையோடு மற்றுமுள்ள மலர்களில் நிறைந்துள்ள தேனை உண்ண வந்து அங்குச் சேர்ந்த வண்டுகள் தம் இனத்துக்கு ஏற்பப் பற்பல ஆரவார ஒலியோடு முழங்கவும், ஓயாது ஒலிக்கும் முரசு போன்று எழும் ஓசையோடு

தமக்குள் தொடரும் விளையாட்டுப் போர் நீங்காத பறவை இனங்கள் அவ்வொலிப் போரில் நீடித்து ஒத்து நிற்கும்.

பல பறவைகள் தனித்துத் திரியும். வேறு பல நெருங்கி வரும். இன்னும் பல எதிர் கொண்டு நிற்கும். மற்றும் பல இறகை விரிக்கும். பின்னும் பல இறக்கைகளை அடித்துக் கொள்ளும். வேறுபல போரில் மெலியும். இன்னும் பல விரும்பிய போரைத் தொடர்ந்து நடத்தும். மற்றும் பல போரில் தோற்று முறியும். பின்னும் பல போரிற் பொலிந்து விளங்கும். வேறு பல பக்கமாய்ப் பிரிந்து செல்லும். இன்னும் பல தம் முழக்கத்தொனி வானத்தை எட்டுமாறு குமுறும்.

தமக்குள் விளையாட்டுப் பகையைக் கொண்ட பறவைகள், பறை ஒலித்தாற் போன்ற ஒலியைச் செய்தன. வாசனை பொழிந்த மலர்களைக் கோதிச் சிதறின. பூவரும்புகளைச் சிதறின. நறுமணமுள்ள தேன் துளிகளைச் சிந்தின. பூவிதழ்களைச் சிதறின, தான் உண்ணும் நீராகிய தேனை உயரத்துக் கொப்பளித்துச் சிந்தின. இவ்வாறெல்லாம் முறைகெட்ட தன்மையாய் விளையாட்டுப் போரிற் கொண்ட அவற்றின் சிந்தனை முயற்சிகள் சிதைந்து முடிவு பெறமாட்டா.

வந்து ஒடிய ஓர் அரச அன்னம், தேன் பாய்ந்தோடிய தாமரை மலரின் அழகிய இதழைத் தன் அலகால் பறித்தெடுத்த பொழுது, தனக்கு முன்னே ஓடிக் கொண்டிருந்த பெட்டை அன்னத்தின் உச்சிமீது மணம் நிறைந்த தேன் துளி பாயவே அத் தோற்றம், துருத்தியோடு அமைந்த மண நீரைக் களிப்புற்ற மகளிர் ஒருவர் மேல் ஒருவர் பாய்ச்சி விளையாடும் தன்மையை ஒத்திருந்தது.

அப்பெட்டை அன்னம் அதனால் நாணியது எனக் கண்டு, தானும் நாணின ஆண் அன்னம், புதிய தேனைச் சிந்தும் தாமரை நெடுங்காட்டின் கடைக்கோடியை அடைந்து மறைந்து கொண்ட முறையைக் கண்டு, இரண்டிற்கும் இடையே நின்ற பல பூவரும்புக் கூட்டம் சிரித்தாற் போல் மலர, பக்கத்தே நடனமாடிக் காண்டிருந்த பறவை இனமெல்லாம். கூடிச் சிரித்து மிக்க ஆரவாரம் செய்தன.

பந்து போன்ற குளிர்ச்சி நிறைந்த பெரு மலர்களைப் பறவை இனங்கள் பறித்து மேலே எறியவே, அவற்றினின்று சந்தனம் போன்ற இனிய தேன் துளிகள் பாய்ந்து, மேகம் பொழியும் நீர்த் துளிகள் போல் சிதறி, பின் தெளிந்த நீர் கொண்ட அத் தடாகத்தின் ஊடே அம்மலர்கள் விழும் தன்மையால், திங்களையும் விண்மீன்களையும் ஒத்துத் தோன்றின.

வண்டுகள் நிறைந்த மலர்களை அலகால் கொய்து பாம்பின் படம் போல் ஆட்டிக் காட்டின பறவைகள் பலவும், களிப்பால் விரித்த தம் சிறகுகளின் ஊடே அம்மலரை மறைத்து வைத்துக் கொண்ட பறவைகள் பலவும், துளி

நிறையக்கொண்ட மேகத்தைச் சென்று சேருமாறு மேலே விசையாக அம்மலர்களை எறிந்த பறவைகள் பலவுமாக, குளிர்ச்சி நிறைந்த மலர்களைக் கொண்டு அவை விளையாடின நயத்திற்கு எல்லையே இல்லை.

ஒரு நடனத்தை உயர்ந்த இடத்து நின்று நோக்கியவர் விரித்து வளமாக அதனைப் புகழும் ஒலி போல், வானுற ஓங்கி நின்று அகன்ற தடாகக் கரையைச் சூழ்ந்துள்ள நிழல் தரும் மரங்களின்மேல் ஏறி அமர்ந்த பறவைகள், பூக்கள் தேன் நிறைந்து மலரும் தடாகத்தில் இவ்வாறு நீர்ப்பறவைகள் ஆடிய திறத்தைக் கண்ட களிப்பினால், பால் போன்று இனிதாகத் தாமும் இசை பாடியபோது, அவற்றின் புகழைப் பாடிய தன்மையாகத் தோன்றும்.

பற்றின் காரணமாகப் பாவத்தைப் பற்றிக் கொண்ட இருண்ட உள்ளம் படைத்த மக்கள், தாம் கற்ற நூலாற் பெறும் முதன்மைப் பயன் இல்லாத விதமாய், இவ்வுலகில் வந்தடைந்த ஆண்டவனைத் தாம் அறிந்து கொள்ளாமையால், அறிவில்லாத பறவைகள் அவ்வாண்டவனுக்கு இவையெல்லாம் செய்தன.

அறிவில்லாத அவ்வுயிர்கள் தாம் அவ்வாண்டவனை அறிந்த தன்மையாக, இவ்வாறெல்லாம் செறிந்த விழாக் கோலம் போலச் சிறப்புக் கொண்டாடின. அவற்றை நெறி பிறழாத கனிவோடு நோக்கிய நிகரற்ற திருக் குடும்பத்தினர், அழிவில்லாத ஆசிகளைக் கூறி, அங்கிருந்து எழுந்து செல்லத் தொடங்கினர்.

ஆராயத் தக்க மாண்பு படைத்த அம்மூவரும், தாம் ஈந்த நல்ல வரத்தினால் உயர்வு கொண்ட அத்தடாகத்தை விட்டுப் பிரிந்து போகையில், அப் பறவை இனங்கள், தம் உள்ளத்துள் துன்பம் பாய்ந்த தன்மையாக, கவிந்து நின்ற வானத்தை எட்டுமாறு அழுது முழங்கின.

**6. சீறாப்புராணம் – பாத்திமா திருமணப் படலம்**

அடிக்கின்ற அலைகள் சங்கின் முத்தங்களை எடுத்து வீசாது இருக்கும் நீர்த் தடாகங்களில் மணம் மிக்க தாமரைப் பூக்கள் மலரும் வகையில் சூரியன் உதயமாகின்ற நேரம்.

இந்தப் பூமியைவிடப் பெரிய பொறுமையையுடைய பாத்திமாவின் தெய்வீகமான அழகு பொருந்தப்பெற்ற புதிய மணக்கோலமுடைய மாளிகையின் வாசலின் முன்னால் ஒருவன் வந்தான்.

அவன் தசை காய்ந்து உடலின் நரம்புகள் புடைத்து வெளித்தெரியும் வகையில் வறுமையுற்றுப் பசியால் வாடி இருந்தான். அவன் குளிரில் நடுங்கிக்கொண்டு கூவினான். “அவன் யார்?” என்று பாத்திமா தமது உதவியாளரிடம் கேட்டார்.

பாத்திமாவின் உதவியாளர்கள், வாசலில் நின்ற பக்கீராகிய அவனிடம், “தங்களின் தாமரை மலர்ப்போன்ற பாதங்கள் துன்புறத்தக்கவாறு இந்த வாசலின் முன் நின்று தாங்கள் கூவக் காரணம் யாது?” என்று கேட்டனர்.

அவன், “இது திருமணவீடு எனக் கருதி நான் இங்கு வந்தேன். என் பசியினைத் தாங்கிக்கொள்ள இயலாததால் இங்கு வந்தேன். எனக்கு உணவும் இந்தக் குளிரினை என் உடல் தாங்கிக்கொள்ள ஓர் ஆடையையும் எனக்குக் கொடுங்கள்” என்று கேட்டான்.

பாத்திமா, அவனின் வார்த்தைகளை ஏற்று அவன் உண்ண ஆறுவித சுவையுடைய கறிகளுன் உணவும் தூய வண்ணம் மிகுந்த புதிய குப்பாயத்தையும் கொடுத்தார்;.

அந்தப் பக்கீர் அந்த உணவினை உண்டு மகிழ்ந்து, அந்த ஆடையை அணிந்து கொண்டு பாத்திமாவைத் துதித்து விடைபெற்றான்.

## அலகு – 2

## நாடகம்

## சேதுக்கரையிலே…

முனைவர் இரா. கோதண்டபாணி

‘சேதுக்கரையிலே’ நாடகத்தின் நாடகமாந்தர்கள்;

1. திருமலை மன்னர் - மதுரை நாயக்க அரசர்
2. சடைக்கத் தேவன் - சேதுபதி மன்னர்
3. இராமப்பய்யன் - திருமலை மன்னரின் படைத்தலைவர்
4. வன்னியத் தேவன் - சேதுபதி மன்னரின் படைத்தலைவர்
5. காத்தலை நாச்சியார் - வன்னியத் தேவனின் மனைவி
6. அழகம்மை – சடைக்கத் தேவரின் மனைவி
7. தம்பித்தேவன் - சேதுபதியின் ஒன்றுவிட்ட சகோதரன்
8. கங்காயி – தம்பித்தேவனின் மகள்
9. தேவகன்னியார் - சேதுநாட்டு நியாய சபைத் தலைமை அமைச்சர்
10. நீலகண்ட தீட்சிதர் - நாயக்கர் அவைக்களப் புலவர்

11. அரங்கண்ண நாயக்கர் - திண்டுக்கல் பாளையக்காரர்

12. வையக்கொண்டான் - சேதுநாட்டுத் தலைமை ஒற்றன்

13. தொட்டிநாயக்கன் - மதுரை நாட்டுத் தலைமை ஒற்றன்

14. வைத்தி ஐயா - இராமப்பய்யனின் அண்ணன்

15. பீட்டர்-டி-வாஸ் - போர்ச்சுக்கீசியர் தளபதி

16. கறுத்தப்பன் - தம்பித்தேவனின் கூலிப்படையாள்

17. வடநாட்டுத் துறவியர்கள்

18. குடியானவர்கள்

19. மாப்பிள்ளை கொண்டப்பய்யன் - இராமப்பய்யனின் உறவினர்

20. வண்டியூர்ப் புலவர்

21. போகலூர்ப் புலவர்

22. குமார அழகன் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

23. மதியாரழகன் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

24. வீசு கொண்டையத் தேவன் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

25. பொத்தை உடையான் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

26. மதத்தேவன் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

27. கறுத்த உடையான் - சேது நாட்டுத் துணைப் படைத்தலைவர்

‘சேதுக்கரையிலே’ நாடகத்தின் கதைச்சுருக்கம்

மதுரையை ஆளும் திருமலை நாயக்க அரசருக்கு அடிமையான நாடாக, திறைசெலுத்தும் நாடாக சடைக்கத் தேவர் ஆளும் சேதுபதி நாடு உள்ளது. சடைக்கத் தேவர் தன்னுடைய படைத்தளபதி வன்னியத்தேவனின் துணையுடன் சேதுபதி நாட்டைச் சுதந்திர நாடாக அறிவிக்கின்றார். இதனை அறிந்த திருமலை நாயக்கர் தன்னுடைய படைத்தளபதி இராமப்பய்;;;;;யனை அனுப்பி, சேதுபதி நாட்டை மீண்டும் தனக்கு அடிமை நாடாக மாற்றி, திறைப்பொருளினைப் பெற்றுவரப் பணிக்கிறார்.

சடைக்கத் தேவனின் ஒன்றுவிட்ட சகோதரரான தம்பித்தேவன் இராமப்பய்யனுடன் கூட்டுவைத்துக்கொள்கிறார். ஒரு கலகப்படையை உருவாக்கிச் சேதுபதி நாட்டுக்கு எதிராகச் செயல்படுகிறார். இராமப்பய்யனுக்கும் வன்னியத்தேவனுக்கும் இடையில் நடக்கும்போரில் இராமப்பய்யனுக்குப் பின்னடைவு ஏற்படுகிறது. அதனால், இராமப்பய்யன் போர்ச்சுக்கீசியர் தளபதி பீட்டர் - டி – வாஸ் உடன் உடன்படிக்கை செய்துகொண்டு அவருடன் இணைந்து சேதுபதி நாட்டைத் தாக்குகிறார். இறுதியில் வன்னியத்தேவன் இறக்கிறார். சடைக்கத்தேவர் சரணடைகின்றார். மீண்டும் சேதுபதிநாடு, மதுரை திருமலை நாயக்க அரசருக்கு அடிமையான நாடாகவே மாறி திறை செலுத்துகிறது.

இராமப்பய்யன் போர்ச்சுக்கீசியருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் அந்நியர் தமிழகப் பகுதியில் நன்கு காலூன்ற வசதியாவிட்டது. ‘தமிழர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் தமிழ் நிலத்தில் அந்நியர் காலூன்றினர்’ என்ற செய்தியைப் படைப்பாளர் இந் நாடகத்தின் வழியாகத் தெரிவித்துள்ளார்.

## அலகு – 3

## இலக்கணம்

1. செய்யுள் உறுப்புகள்

   எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, விளக்கம்

2. நான்கு வகைப்பாக்களின் பொது இலக்கணமும் வகைகளும்

   ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா

3. அணி இலக்கணம்

   உவமை, உருவகம், வேற்றுமை, தற்குறிப்பேற்றம், பிறிதுமொழிதல் அணிகள்

### செய்யுள் உறுப்புகள்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, விளக்கம்

அசை

நேர் அசை நான்கு முறைகளில் அமையும்.

1. அ - குறில் தனித்து வந்த நேரசை

2. அக் - குறிலும் ஒற்றும் சேர்ந்து வந்த நேரசை

3. ஆ  - நெடில் தனித்து வந்து நேரசை

4. ஆள் - நெடிலும் ஒற்றும் சேர்ந்து வந்த நேரசை

நிரை அசை நான்கு முறைகளில் அமையும்.

1. அணி  - இருகுறில் இணைந்து வந்த நிரையசை

2. அணில் - இருகுறில் ஒற்று இணைந்து வந்த நிரையசை

3. படா  - குறிலும் நெடிலும் இணைந்து வந்த நிரையசை

4. படாம் - குறிலும் நெடிலும் ஒற்றும் இணைந்து வந்த நிரையசை

ஒற்று தனித்து வந்தால் அசையாகாது. இரண்டு ஒற்றுக்கள் இணைந்து வந்தால் ஓர் ஒற்றாகவே கொள்ள வேண்டும். இரண்டு நெடில்கள் சேர்ந்து ஓர் அசை ஆகாது. மூன்று குறில்களோ நெடில்களோ சேர்ந்து வந்தாலும் ஓர் அசை ஆகாது.

**சீர்**

ஓர் அசை தனித்தோ ஒன்றிற்கு மேற்பட்ட் அசைகள் சேர்ந்தோ ஒழுங்குபடச் செய்யுள் அடிகளில் அமைவது சீர் ஆகும்.

சீர் நான்கு வகைப்படும். அவை 1. ஓர் அசைச்சீர், 2. ஈர் அசைச்சீர், 3. மூவசைச்சீர், 4. நான்கசைச்சீர் என்பனவாகும்.

**மூவசைச் சீர்கள்**

| சீர் | அசை | வாய்பாடு | பொருள் |
|---|---|---|---|
| வந்தானே | நேர்நேர்நேர் | தேமாங்காய் | இவற்றைக் காய்ச்சீர் அல்லது வெண்சீர் என்பர் |
| வருவானே | நிரைநேர்நேர் | புளிமாங்காய் | |
| வருகிறானே | நிரைநிரைநேர் | கருவிளங்காய் | |
| போகிறானே | நேர்நிரைநேர் | கூவிளங்காய் | |
| வந்தானடி | நேர்நேர்நிரை | தேமாங்கனி | இவற்றைக் கனிச்சீர் அல்லது வஞ்சி உரிச்சீர் என்பர் |
| வருவானடி | நிரைநேர்நிiர் | புளிமாங்கனி | |
| வருகிறானடி | நிரைநிரைநிரை | கருவிளங்கனி | |
| போகிறானடி | நேர்நிரைநிரை | கூவிளங்கனி | |

**அடி**

அடி என்பது, செய்யுள் உறுப்புகள் ஆறனுள் ஒன்று. செய்யுள் உறுப்புகளின் வரிசையில் ஐந்தாவதாக வைத்து எண்ணப்பெறுவது. ‘எழுத்து அசை சீர் பந்தம், அடி தொடை| என்று அமிதசாகரரால் வைப்பு முறை சொல்லப்படுகின்றது. தமிழ்ப் பாக்களின் இலக்கணத்தைக் கூறும் யாப்பியல் நூல்கள், பாக்களின் உறுப்புக்களாக, எழுத்து, அசை, சீர், அடி என்பவற்றைக் குறிப்பிடுகின்றன. எழுத்துக்கள் சேர்ந்து அசையும், அசைகள் சேர்ந்து சீரும், சீர்கள் சேர்ந்து அடியும் உருவாகின்றன.

சீர்கள் இரண்டினால் ஓரடி நிரம்பினால் அதைக் குறளடி என்றனர். சீர்கள் மூன்றனால் நிரம்பினால் அது சிந்தடி. சீர்கள் நான்கனால் நிரம்பினால் அளவடி அல்லது நேரடி. ஐந்தனால் நிரம்பினால் நெடிலடி. ஆறு, ஏழு, எட்டு என ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் நிரம்பினால் கழிநெடிலடி என்றனர் யாப்பிலக்கண நூலார். இவற்றையே சொல்லும்முறை மாற்றி இரண்டு சீர்களால் இயங்குவது குறளடி. மூன்று சீர்களால் இயங்குவது சிந்தடி. நான்கு சீர்களால் இயங்குவது அளவடி. ஐந்து சீர்களால் இயங்கும் அடி நெடிலடி. ஐந்துக்கும் மேற்பட்ட அடிகளால் இயங்கும் அடி, கழிநெடிலடி என்றும் கூறுவர்.

நான்கு வகைப்பாக்களின் பொது இலக்கணமும் வகைகளும்

ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா

‘**ஆசிரியப்பா**’

ஆசிரியப்பா என்பது, தமிழின் யாப்பியலில் சொல்லப்படும் பாவகைகளுள் ஒன்று.

ழ இது அகவலோசையைக் கொண்டு அமைவது.

ழ ஆசிரியத்தளை எனப்படும் தளை வகையே இப்பாவுக்கு உரியது. எனினும் வேறு தளைகளும் இடையிடையே வருவது உண்டு.

ழ இவ்வகைப் பாக்கள் மூன்று அடிகள் தொடக்கம் எத்தனை அடிகள் கொண்டதாகவும் இருக்கலாம். அடிகளின் எண்ணிக்கைக்கு மேல் எல்லை கிடையாது.

ழ ஆசிரியப்பாவின் அடிகள் நான்குசீர்களைக் கொண்ட அளவடியாகவோ, மூன்று சீர்கள் கொண்ட சிந்தடியாகவோ, இரண்டு சீர்களைக் கொண்ட குறளடியாகவோ அமையலாம். ஐந்து சீர்களைக் கொண்ட அடிகளும்

இடம்பெறலாம். எனினும் முதல் அடியும் இறுதி அடியும் அளவடிகளாக இருத்தல் வேண்டும்.

ழ ஆசிரியப்பாவின் இறுதி அசை ஏ, ஓ, என், ஈ, ஆ, ஆய், அய் என்னும் அசைகளுள் ஒன்றாக இருத்தல் வேண்டும் என்ற விதியும் உண்டு.

‘**வெண்பா**’

வெண்பா செப்பலோசை பெற்று வரும்.

ழ வெண்பா வகையில் அமைந்த ஒவ்வொரு பாடலும் இரண்டு முதல் பன்னிரண்டு அடிகள் வரைக் கொண்டிருக்கும்.

ழ வெண்பா ஈரசைச் சீர்களான மாச்சீரையும் விளச்சீரையும் பெற்று வரும்.

ழ மூவசைச் சீர்களில் காய்ச்சீர் மட்டுமே வெண்பாவில் வரும்; வராது.

ழ வெண்பாவுக்கான தளைகளாக இயற்சீர் வெண்டளை மற்றும் வெண்சீர் வெண்டளை ஆகிய உள்ளன.

ழ இயற்சீர் வெண்டளை - நிலைமொழி ஈற்றில் மாச்சீர் வர வருமொழி முதலில் நிரையசையே வர வேண்டும்; நிலைமொழி ஈற்றில் விளச்சீர் வர வருமொழி முதலில் நேரசையே வர வேண்டும்.

ழ வெண்சீர் வெண்டளை - நிலைமொழி ஈற்றில் காய்ச்சீர் வர வருமொழி முதலில் நேரசையே வர வேண்டும்.

‘**கலிப்பா**’

கலிப்பா என்பது தமிழில் உள்ள செய்யுள் வகைகளுள் ஒன்று. இன்று கிடைக்கும் பழந்தமிழ் நூல்களுள் கலித்தொகை மட்டுமே கலிப்பாவினால் ஆன நூல் ஆகும். இதைவிடக் கலம்பகம் எனப்படும் நூல் வகையில் முதற் செய்யுளாகவும் கலிப்பாக்கள் காணப்படுகின்றன.

ழ கலிப்பா துள்ளலோசையை அடிப்படையாகக் கொண்டது.

ழ துள்ளலோசை, இடையே அமையும் கலித்தளையால் விளைவதால், இத் தளையே கலிப்பாவுக்கு உரியது. எனினும் கலிப்பாவில் கலித்தளை மட்டுமே வரவேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. இதில் கலித்தளையே அதிகமாக இருப்பினும் பிற வகைத் தளைகளும் வரலாம். கலிப்பா

ழ பொதுவாக அளவடி எனப்படும் நான்கு சீர்களைக் கொண்ட அடிகளைக் கொண்டிருக்கும்.

**கலிப்பாவின் வகைகள்**

கலிப்பா மூன்று முதன்மை வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. அவை,

1. ஒத்தாழிசைக் கலிப்பா,

2. வெண்கலிப்பா,

3. கொச்சகக் கலிப்பா என்பனவாகும்.

இவற்றுள் வெண் கலிப்பா தவிர்ந்த ஏனைய இரண்டு வகைக் கலிப்பாக்களுக்கும் துணை வகைகள் உண்டு.

ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு,

1. நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா,

2. அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா,

3. வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா என்ற மூன்று வகைகள் உண்டு.

கொச்சகக் கலிப்பாவுக்கு,

1. தரவுக் கொச்சகம்,

2. தரவிணைக் கொச்சகம்,

3. சிஃறாழிசைக் கொச்சகம்,

4. பஃறாழிசைக் கொச்சகம்,

5. மயங்கிசைக் கொச்சகம் என்ற ஐந்து வகைகள் உண்டு.

‘**வஞ்சிப்பா**’

தூங்கலோசையே வஞ்சிப்பாவுக்கு அடிப்படையாகும்.

ூ வஞ்சிப்பாவின் அடிகளில் அமையும் சீர்களின் தன்மை மற்றும் அவற்றின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து வஞ்சிப்பாக்கள் இரு வகையாக உள்ளன. அவை, குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என்பனவாகும்.

ூ குறளடி என்பது இரண்டு சீர்களைக் கொண்ட அடியைக் குறிக்கும். எனவே குறளடி வஞ்சிப்பாக்களில் ஒவ்வொரு அடியிலும் இரண்டு சீர்கள் காணப்படும்.

ழ சிந்தடி என்பது மூன்று சீர்களால் அமைந்த அடியைக் குறிக்கும். எனவே மூன்று சீர்களால் அமைந்த அடிகளைக் கொண்ட வஞ்சிப்பா சிந்தடி வஞ்சிப்பா ஆகும்.

ழ இச் சீர்கள் மூன்று அசைகள் கொண்டவையாகவோ அல்லது நான்கு அசைகள் கொண்டவையாகவோ இருக்கலாம். மூவசைச் சீர்களாயின் அவை வஞ்சிச்சீர் என அழைக்கப்படும், நிரையசையை இறுதியில் கொண்ட சீர்களாக இருத்தல் வேண்டும். நான்கு அசைகளைக் கொண்ட சீர்கள் ஆயின் அவையும் நிரை அசையில் முடியும் சீர்களாக இருத்தல் வேண்டும்.

ழ வஞ்சிப்பா குறைந்த அளவாக மூன்று அடிகளைக் கொண்டிருக்கும். தேவையைப் பொறுத்து அடிகளின் எண்ணிக்கை இதற்கு மேல் எத்தனையும் இருக்கலாம்.

ழ வஞ்சிப்பாக்களின் முடிவில் தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புக்களும் அமைந்திருக்கும். சுரிதகம் எப்பொழுதும் ஆசிரியச் சுரிதகமாகவே இருக்கும்.

**அணி இலக்கணம்**

உவமை, உருவகம், வேற்றுமை, தற்குறிப்பேற்றம், பிறிதுமொழிதல் அணிகள்

**உவமை அணி**

சொல்ல எடுத்துக் கொண்ட பொருளை வேறு ஒரு பொருளுடனோ அல்லது பல பொருளுடனோ அப்பொருளின் பண்பு, தொழில், பயன் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு இயைபுபடுத்தி இரு பொருள்களுக்கும் இடையே உள்ள ஒப்புமைப் புலப்படும்படி பாடுவது உவமை அணியாகும். ஒப்புவமைப்படுத்துவதற்காகப் போன்ற என்று பொருள் தரும் சொற்கள் உவம உருபுகள் எனப்படும். சான்று: போன்ற, போல, நிகர்த்த, உடைய, ஒப்ப, அன்ன, அனைய, அற்றே.

**சான்று:**

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

இங்கு,

உவமானம்: அகழ்வாரைத் தாங்கும் நிலம்

உவமேயம்: தம்மை இகழ்வார்ப் பொறுத்தல்

உவமை உருபு: போல

### இல்பொருள் உவமையணி

இல்பொருள் உவமையணி மறைபொருளில் வரும். அதாவது இல்லாத ஒன்றை இருப்பது போல கற்பனை செய்து அதனை உவமையாகக் காட்டுவது.

**சான்று:**

"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பால்கண்

வற்றல் மரம் தளிர்த்தற்று"

அதாவது, வலிமையான ஒரு பாலைவனத்திலே பட்டமரம் தளிர்த்ததைப் போன்று அன்பில்லா உயிர்வாழ்க்கை தளிர்க்காது. அதாவது வலிமையான பாலைவனத்திலே பட்டமரம் தளிர்க்கவே தளிர்க்காது. அதே போலத்தான் அன்பில்லா வாழ்க்கையும்.

### உருவக அணி

உருவக அணி என்பது உவமையாக உள்ள பொருளுக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் வேறுபாடு தோன்றாமல் (அதுதான் இது என உறுதிப் படுத்திக் கூறுவது) இரண்டும் ஒன்று என்ற உணர்வு தோன்ற இரண்டையும் ஒற்றுமைப் படுத்துவது ஆகும். இது உவமை அணியின் மறுதலை.

**சான்று**

பச்சை மாமலை போல் மேனி - இது உவமை அணி.

மையோ மாமலையோ மறிகடலோ - இது உருவக அணி

இதில் கண்ணனை மை, மாமலை, மறிகடல் என உருவகிக்கப் படுகிறது. மை போன்ற மேனி என்று சொல்லியிருந்தால் இது ஒரு உவமையணி. ஆனால் மையோ என்னும் போது அவன் மேனிதான் மை என்று சொல்லியாயிற்று. இது உருவக அணி.

### பிறிது மொழிதல் அணி

பிறிது மொழிதல் அணி என்பது தான் கருதும் பொருளை வெளிப்படையாகக் கூறாமல் பிறிதொன்றால் ஏற்றிக் கூறுதல். அதாவது கருத்திலே ஒன்றைக் கொண்டு, அது குறிப்பால் விளங்கித் தோன்றுமாறு வேறு ஒன்றைக் கூறுவது போல பிறிதொரு பொருள் மேல் ஏற்றிக் கூறுவது. புலவர் தான் கருதிய பொருளை வெளிப்படையாகக் கூறாமல் அதனை வெளிப்படுத்துவதற்குரிய ஒத்த பிறிதொன்றினைச் சொல்வது.

பிறிது மொழிதல் அணி உவமானத்தை மட்டும் கூறி உவமேயத்தை உணர்த்தி நிற்கும்.

**சான்று**

உவமை அணி – மயில் போலும் பெண் வருகிறாள். (அது போல இது)

உருவக அணி – மயில் வருகிறாள். (இதுதான் அது)

பிறிது மொழிதல் அணி – அது போல இது என்றும் வராது. இதுதான் அது என்றும் வராது.

தற்குறிப்பேற்ற அணி

தற்குறிப்பேற்ற அணி என்பது இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றுவதாகும்.

**சான்று**

"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி

வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட" (சிலப்பதிகாரம்)

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழைய முற்படும்போது இயல்பாகக் காற்றிலாடும் தோரண வாயிற் கொடிகளைக் கவிஞர் தம் கற்பனையினால் கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்று முன்னமே அறிந்து வர வேண்டாம் என அக்கொடிகள் எச்சரிப்பதாகக் குறிப்பேற்றிக் கூறுவார்.

**சான்று**

**"தையல் துயர்க்குத் தறியா தம் சிறகால்**

**கையால் வயிறலைத்து காரிருள் வெய்யோனை**

**வாவு பரித் தேரேறி வாவென்றழைப்பது போல்**

**கூவினவே கோழிக் குலம்." (நளவெண்பா)**

நளன், தமயந்தியை நீங்கி, காட்டில் விட்டுச் சென்றான். அதிகாலையும் புலர, கோழிகளும் இயல்பாக கூவுகின்றன. இதைக் கண்ட புகழேந்தி, தமயந்தியின் தாங்கொணாத் துயர் கண்டே, கோழிகள் சூரியனை விரைவாக வரக் கதறுவதாக கூறுகிறார்.

**சான்று**

**“காரிருளில் கானகத்தே காதலியை கைவிட்ட**

**பாதகனை பார்க்கப் படாதேன்றோ - நாதம்**

**அழிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவன் ஓடி**

**ஒழிக்கின்ற தென்னோ உரை.” (நளவெண்பா)**

நளன் கடலோரமாகச் செல்கின்றான். நண்டுகள்("அலவன்") தம் வளையில் இருந்து வெளிக்கிட்டு கடல் நாடிச் செல்கின்றன. இதை கண்ட புலவர், மனைவியைக் காட்டில் விட்டுச் சென்ற பாதகனை பார்க்கக் கூடாது என்றே நண்டுகள் வெளியேறிச் செல்கின்றன என்கிறார்.

**வேற்றுமை அணிய**

இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒப்புமையை வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ முதலில் கூறிப் பின்னர் அவற்றுக்கிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது ‘வேற்றுமை அணி’ ஆகும்.

ஒப்புமையைக் கூறும் முறையால் கூற்று வேற்றுமை, குறிப்பு வேற்றுமை என வேற்றுமைஅணி இரு வகைப்படும். இரு பொருள்களுக்கு இடையிலான ஒப்புமையை வெளிப்படையாகச் சொல்லுவது கூற்று வேற்றுமை எனப்படும். அவ்வொப்புமையை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்லுவது குறிப்பு வேற்றுமை எனப்படும்.

வேற்றுமையை எடுத்துக்காட்டும் வகையிலும் வேற்றுமை அணி இருவகைப்படும். இருபொருள்களை வேற்றுமைப்படுத்தும் போது, இரண்டும் சமமான சிறப்புடையவையே எனத் தோன்றுமாறு கூறுவது வேற்றுமைச் சமம் எனப்படும். அவ்வாறு அல்லாமல், இரு பொருள்களுள் ஒன்று, மற்றொன்றைவிட உயர்ந்தது எனத் தோன்றுமாறு காரணத்துடன் சொல்வது உயர்ச்சி வேற்றுமை எனப்படும்.

ஒரு பொருளை மட்டும் வேற்றுமைப்படுத்துவது ஒரு பொருள் வேற்றுமை எனவும், இரு பொருள்களையும் வேற்றுமைப்படுத்துவது இரு பொருள் வேற்றுமை எனவும் குறிப்பிடப்படும்.

## அலகு – 4

## இலக்கிய வரலாறு

1. ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறுகாப்பியம், கம்பராமாயணம், பெரியபுராணம்

2. நாடகம் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ்க் காப்பியங்களின் தோற்றமும் வளர்ச்சி நிலையும் குறித்து இக் கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**காப்பியம், சொல்விளக்கம்:**

‘இயம்பு’ என்பது ‘சொல்’ எனப் பொருள்படும் ஒரு வினைச்சொல். இசைக் கருவிகளை ‘இயம்’ என்பது பண்டைய வழக்கு. பல இசைக் கருவிகளைப் பல்லியம் என்பர். சிறிய இசைக்கருவிகளை இயக்கிக்கொண்டு குன்றுதோறாடும் முருகன் ‘குறும்பல்லியத்தன்’ எனப் போற்றப்படுகிறான். பல இசைக் கருவிகளை முழக்கிய சங்ககாலப் புலவர் நெடும்பல்லியத்தனார். இவை இயம்பும். இயம்பப் பயன்படுத்தப்படும். இசைக் கருவிகளால் இயம்புவோர் இயவர். தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரில் ‘காப்பியம்’ என்னும் சொல் உள்ளது. தொல் காப்பு இயம் எனபது தொல்காப்பியம். இது தமிழில் இருக்கும் மொழியியல் வாழ்வியல் தொன்மையை இயம்பும் நூல். இவற்றால் ‘காப்பியம்’ எனபது தூய தமிழ்சொல் என்பது பெறப்படும்.

**காப்பியத்தின் வகைகள்:**

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்று. இதனைப் பெருங்காப்பியம் என்றும், காப்பியம் அதாவது சிறுகாப்பியம் என்றும் பகுத்துக் காட்டினர். அறம்,பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஒரு ஒப்பிலாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. நான்கு பொருள்களையும் பயக்காமல் சில பொருள்கள் மட்டும் பயக்கும் கதைநூல் சிறுகாப்பியம்.

**காப்பியங்களின் தோற்றம்:**

தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடற்றிரட்டுக்களாகவே உள்ளன. மூன்று அடி முதல் 782 அடியுள்ள நீண்ட பாட்டு வரையில் உள்ள தனிப்பாட்டுக்களே சங்க இலக்கியமாக உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஒட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும்.

சங்கப் பாட்டுக்களில் நாட்டியக் கலையில் நன்கு தேர்ந்த விறலியர், கூத்தர், பொருநர் என்போர் பற்றிய குறிப்புக்கள் உள. கதை தழுவிய நாடகங்கள் பல இருந்திருக்க வேண்டும். கதைகளும் பல இருந்திருக்கக் கூடும். ஆனால், அந்தக் கதைகள் திரண்டு வளர்ந்து காப்பியங்களாக உருவம் கொள்ளவில்லை. கற்றறிந்த புலவோர் அந்தக் கதைகளை எழுதிப் போற்ற மனம்கொள்ளாதது காரணமாக இருக்கலாம்.

**முதற் காப்பியம்:**

மேற்கூறிய இந்நிலைகளையெலாம் கடந்து காப்பியம் இயற்ற முன்வந்தவர்தான் இளங்கோவடிகள். இவர் சிலப்பதிகாரம் எனும் முதற் காப்பியத்தின் இயற்றுநர். இவரே முதன் முதலாகத் தமிழ் மக்கள் எல்லோரையும் ஒருங்கே காணும் நெறிநின்று, தமிழ் நாட்டின் பலபகுதிகளையும் ஒரு நூலில் (சிலப்பதிகாரத்தில்) குறித்துள்ளார்.

**பாகுபாடு:**

காப்பியத்தை ஐம்பெருங்காப்பியங்கள் என்றும் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்றும் பிற்காலத்தில் பாகுபாடு செய்துள்ளனர். இந்தப் பாகுபாடு தோன்றிய காலம் கருத்தில் கொள்ளத்தக்கது.

‘ஐம்பெருங்காப்பியம்’ என்னும் தொடரை 14ஆம் நூற்றாண்டு மயிலைநாதர் குறிப்பிடுகிறார். தணிகையுலா நூல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்தப் பாகுபாடு தோன்றியது.

**சிலப்பதிகாரம்:**

தமிழில் தோன்றிய முதல் காப்பியம்

சிலம்பு எனும் காலில் அணியும் காலணியால் பெற்ற பெயர்.

தமிழ் பண்பாட்டை, கலைகளை காட்டுகின்ற காப்பியம்.

பின்னால் வந்த சிற்றிலக்கியங்களுக்கு வித்திட்ட காப்பியம்.

ஆசிரியர் - இளங்கோவடிகள்

மூன்று காண்டங்களும் 30 காதைகளும் உடையது.

**மணிமேகலை:**

கோவலன் மாதவியின் மகளான மணிமேகலையின் கதை. மாதவி துறவியான கதை.

இடையில் அணியும் ஆபரணத்தால் பெற்ற பெயர்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டை காப்பியம் என்று போற்றபடுகின்றன.

மாதவியின் நாட்டியக் கலை விளக்கமாக கூறப்படுகிறது.

**ஆசிரியர் - சீத்தலை சாத்தனார்.**

உலகில் வாழ முதலில் உணவு, மானத்தைக் காக்க உடை, பாதுகாப்போடு வாழ தங்கும் இடம் (வீடு) இவைதான் சமுதாயத்தின் அடிப்படைத் தேவை. இதுதான் மனித அறம் என்று கூறுகிறது இந்நூல். மனித வாழ்கைக்குத் துணை அவரவர் செய்யும் நல்வினைகளே என்று கூறுகிறது.

வாழ்க்கை தத்துவங்களைக் கூறுவதோடு இயற்கையையும் அழகாக கூறியுள்ளது.

30 காதைகள் அகவற்பாக்களால் அமைந்தது.

காலம் - கி.பி. 250.

**பெருங்கதை:**

சிலம்பு, மணிமேகலைக்கும் பிறகு அகவற்பாவால் எழுதப்பட்ட காப்பியம்.

உதயணன் கதையைக் கூறுவது.

ஆசிரியர் - கொங்கு நாட்டு குறு நில மன்னர்களில் ஒருவரான கொங்கு வேளிர்

முதலில் தோன்றிய சமன காப்பியம்

காலம் - 7ஆம் நூற்றாண்டு

முதல் இறுதிப் பகுதிகள் கிடைக்கவில்லை.

**சீவகசிந்தாமணி:**

சீவகனின் வரலாற்றை கூறும் காப்பியம். தமிழில் தோன்றிய முதல் விருத்த காப்பிய.

ஆசிரியர் - சமண முனிவர் திருத்தக்க தேவர்

காலம் - 10ஆம் நூற்றாண்டின் முன் பகுதி

**வளையாபதி:**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. 72 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

**குண்டலகேசி:**

சுருண்ட கூந்தலை உடையவர் என்பது பொருள். முழு நூலும் கிடைக்கவில்லை. 19 பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. இது பௌத்த சமய நூல்.

ஐஞ்சிறு காப்பியம்

**சூளாமணி:**

தலைக்கு அணியும் ஒரு ஆபரணம்

சமண மத கொள்கைகளைப் பரப்புவது நூலின் நோக்கம்

ஆசிரியர் - தோலாமொழித் தேவர்

12 சருக்கங்களையும் 2131 பாடல்களையும் கொண்டது.

**தமிழ் நாடகக் கலையின் தோற்றமும் வளர்ச்சி நிலையும்**

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பலவகைக் கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாடு ◌ௗ அகம் ஸ்ரீ நாடகம். அதாவது, நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை. கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம், ஒலி, ஒளி முதலான கலைகளின் ஒன்றிணைப்பால் படைத்துக் காட்டுவதை நாடகம் எனலாம். இவற்றை எழுதுபவர்கள் நாடகாசிரியர் என அறியப்படுவார். நாடகக் கலையின் தோற்றமும் வளர்ச்சிநிலையும் குறித்து இக்கட்டுரையின் காண்போம்.

**நாடகம் - வளர்ச்சியும் வீழ்ச்சியும்**

‘இயல்’ என்பது சொல் வடிவம். ‘இசை’ என்பது சொற்களோடு, இசையும் சேர்ந்த வடிவம். ‘நாடகம்’ என்பது, ‘இயல்’, ‘இசை’ மற்றும் உடல் அசைவுகளை அடிப்படையாகக் கொண்ட வடிவம். ‘உலகமே ஒரு நாடக மேடை’ என்றார் ஒரு கிரேக்க அறிஞர். உலகில் நாடகங்கள் பலவகைகளாக நடத்தப்படுகின்றன. தமிழை தமிழகத்தினை பொருத்தளவில் நாடகம் என்பது தெருக்கூத்து மற்றும் பாவை நாடகங்களாக நடத்தப்படுகின்றன.

தமிழர் நாடகக்கலையின் தோற்றத்தினை விவரிக்கும் நூற்களில் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுவது அகத்தியம் என்னும் தலைச்சங்க காலத்து நூலாகும். நாடகம் என்பது பாட்டும், உரையும், நடிப்பும் என்பது தமிழ் மரபுவழி கூறும் இலக்கணமாக விளங்குகின்றது. சங்க காலத்தில் குணநூல், கூத்தநூல்,

சயந்தம் நூல், மதிவாணர் நாடகத் தமிழர், முறுவல் போன்ற நாடக நூல்கள் இருக்கப்பெற்றன என்பதனை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகின்றது குறிப்பிடத்தக்கது. மேலும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூற்களில் தமிழ்நாடகக்கலை பற்றிய சான்றுகள் பல உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடைச்சங்க காலம் வரை எழிலோடு இருந்த நாடகக்கலை, கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் காலப்பகுதியில் எவ்வித செழிப்புமற்ற நிலையில் இருந்தது. தமிழகத்தின் இருண்ட காலமாகக் கருதப்படும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் காஞ்சியில் புத்த, சமண சமயங்கள் பரப்பப்பட்டன. அச்சமயம் இருந்த 'நாடகக்கலை சிற்றின்ப வேட்கையினை எழுப்புவது' என்ற கருத்தினை வலியுறுத்தி நடைபெற்றன. மேலும் இக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள், வடமொழி நூல்களினைப் போற்றி பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தம் கருத்துக்களினை வெளியிட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. இக்காரணங்களினால் தமிழ் நாடகக் கலை தழைக்க வாய்ப்பில்லாமல் இருந்தது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டுன் காலப்பகுதியில் தமிழகத்தில் பல்லவ மன்னர்களின் ஆட்சி நிலைகொண்டிருந்த சமயம் நாடகக்கலை சிறப்புப் பெறாமலேயே இருந்தது. வடமொழியில் பற்றுக்கொண்ட பல்லவ மன்னனான மகேந்திர வர்மன் 'மத்த விலாசப் பிரகசனம்' என்னும் வடமொழி நாடகத்தினை எழுதினான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மறுமலர்ச்சிக்காலம்

கி. பி. 900 முதல் கி. பி. 1300 வரை சோழ மன்னர்களின் ஆட்சியில் தமிழகத்தின் கலைகள் வளர்ச்சிபெற்றன. கி. பி. 846 ஆம் ஆண்டு விசயாலய சோழனால் எழுச்சிபெற்ற சோழப்பேரரசு முதலாம் பராந்தக சோழன் ஆட்சியின் பின்னர் வலுப்பெற்றது. கி. பி. 1246 முதல் 1272 வரை ஆட்சி செய்த மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்தில் தமிழ் நாடகக்கலை வளர்ச்சிபெற்றது.

கி. பி. பதினேழாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் சோழ அரசர்களின் ஆதரவில் அரண்மனைகள், கோயில்கள் போன்றனவற்றில் நடத்தப்பெற்ற நாடகக்கலை மக்கள் மன்றங்களில் மீண்டும் நடத்தப்பட்டன. சங்க காலத்தில் நடைபெற்ற பொதுவியற் கூத்துக்கள் போலவே பதினேழாம் நூற்றாண்டுக் கால நாடக்கக்கலை மக்களின் கலையாக வளர்ச்சி பெற்று பின்னர் பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற நாடகங்கள் தோன்றின.

### தற்காலம்

இன்றைய தமிழ் நாடகக்கலைக்கு வித்திட்டோர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் 'தெருக்கூத்து' என்ற நாடக வடிவம் தோற்றம் பெற்றது. தெருக்கூத்து என அழைக்கப்பட்டிருந்த நாடகக்கலையின் வளர்ச்சிக்கு வித்திட்டவராக கோவிந்தசாமி ராவ் விளங்குகின்றார். நாடகத்தின் நேர அமைப்பினை இக்காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தவரும் ஆவார் கோவிந்தசாமி ராவ். கி.பி. 1891 ஆம் ஆண்டளவில் பயின்முறை நாடகக்குழுவினைத் தோற்றுவித்த 'நாடகத் தந்தை' என அழைக்கப்பெற்ற பம்மல் சம்பந்த முதலியாரால் தமிழ் உரை நடை நாடகங்கள் தமிழ் நாடக மேடையினுள் அறிமுகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர் வழியாக நாடக மேடைகளில் அமைக்கப்பெற்ற கட்டடம் போன்ற செயற்கையில் செய்யப்பட்ட அமைப்பு மேடையில் மேலும், கீழும் ஏறுவதும் இறங்குவதுமான புதிய யுக்திகளை அறிமுகமும் செய்தார் பம்மல் சம்பந்த முதலியார். கி. பி. 1891 ஆம் ஆண்டு தனது 24 ஆம் அகவையில் நாடகத்துறையில் தன்னை ஈடுபடித்திக்கொண்டு 'தமிழ் நாடகத் தந்தை', 'தமிழ்நாடகத் தலைமையாசிரியர்' போன்ற பட்டங்களினைப் பெற்ற சிறப்பினை உடையவர் தவத்திரு சங்கரதாச சுவாமிகள். கி. பி. 1872 ஆம் ஆண்டு பிறந்தவரான சி. கன்னையா தமது பதினேழாவது வயதில் 'இந்து வினோத சபா' என்ற நாடகக் குழுவொன்றில் சேர்ந்து தன் 26ஆம் வயதில் 'ஸ்ரீகிரு~;ணவினோத சபா' என்ற நாடகக்குழுவொன்றினைத் தோற்றுவித்தார். மின் விளக்கு ஒளிகளால் வண்ணத்திரைகளுடன் புதிய வடிவங்களினை மேடையில் தோற்றுவித்த முதல் நாடக அமைப்பாளர் என்ற பெருமையினை உடையவர். மேலும் இவரது நாடகங்களில் உயிருள்ள மான், காளை, பசு, யானை போன்ற விலங்கினங்களை நடிக்க வைத்துப் புதுமை நிகழ்த்தினார். சி. கன்னையாவிற்கு முற்பட்ட நாடக அரங்குகள் மேடைகளாக இருந்து வந்தன இதனை மாற்றி முக்கோண கனபரிமாண அமைப்பு மூலம் அரங்குகளை அமைத்து ஒரு அரங்கில் காட்சி நடந்து கொண்டிருக்கும்வேளை அடுத்த அரங்கில் அடுத்த காட்சிக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யப்பட்டிருக்கும் இவரது நாடகங்களில். நாடகங்களின் காட்சியமைப்புக்களின் வழிகாட்டி சி. கன்னையா என பலராலும் கருதப்படுகின்றவர். 'நவாப் ராஜமாணிக்கம்' என அழைக்கப்பெற்ற டி. எஸ். இராசமாணிக்கம் என்பவரால் நாடகம் ஒரு மக்கள் இலக்கியம் என்ற பொருளால் அழைக்கப்பெற்றது. மேலும் இவர் தமது நாடக மேடையினை இயங்கு உலகமாக மாற்றியமைத்தவர் என்ற பெருமையினை உடையவர். நவாப் ராஜமாணிக்கத்தின் அனைத்து நாடகங்களும் ஏறத்தாழ எட்டாயிரம் முறைகள் மேடையேறியதும் குறிப்பிடத்தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஐம்பதாண்டு காலம் தமிழ் நாடகக்கலைக்குப் பெரும்பங்காற்றியவர்கள் தி. க. சங்கரன், தி. க. முத்துசாமி, தி. க. சண்முகம், தி. க. பகவதி ஆகிய தி. க. சண்முகம் சகோதரர்கள் ஆவர்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகள் தமிழ்மரபுவழி நாடகங்கள் சீரான வளர்ச்சியினை எட்டியபொழுது தி. கெ. சண்முகத்தின் இராஜராஜசோழன் என்ற நாடகத்தின் மூலமும், 'நாடகக் காவலர்' என அழைக்கப்பெற்ற ஆர். எஸ். மனோகரின் இலங்கேஸ்வரன் என்ற நாடகத்தின் மூலமும் தமிழ் நாடகக்கலை மிகவும் பிரபலமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## பெரியபுராணத்தின் சிறப்புகள்

செயற்கு அரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலே பெரிய புராணம் (பெரியர் புராணம்) ஆகும். இந்நூல் பல்வேறு நாடு, ஊர், சாதி, தொழில் கொண்ட நாயன்மார்களுடைய வாழ்க்கையை விவரிக்கிறது. அக்காலச் சமுதாய வரலாற்றையும் எளிய, இனிய நடையில் எடுத்து சொல்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், பக்தி வளமும், இறையருட் திறமும் குறைவிலாது சிறக்குமாறு இலக்கியப் பெருங்களஞ்சியமாக, பெரிய புராணத்தை இயற்றி அருளினார். இதன் சிறப்புகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## நூலாசிரியர்

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் அருண்மொழித் தேவர். இப்பெயரே அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கியதாகும். சேக்கிழார் என்பது இவரது குடிப்பெயராகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அம்மன்னனின் வேண்டுகோளை ஏற்று, அடியார்களின் பெருமையை வரலாறாக எழுதினார். இந்நூலின் பெருமையை உணர்ந்த மன்னன், அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகர்வலம் செய்து உத்தம சோழப் பல்லவராயன்என்னும் பட்டம் தந்து சிறப்பித்தான். இவருடைய காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும்.

## காப்பிய நோக்கம்

கி.பி.11, 12ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனாவான் (அநபாய சோழன்). அம்மன்னனின் அவையில் முதல் அமைச்சராகப் பணி புரிந்தவர் சேக்கிழார். சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவனடியார்களின் உயர்ந்த வாழ்க்கையைக் கதைப் பின்னலாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியைவழிநூலாகவும் கொண்டு பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் படைத்தார் சேக்கிழார்.

சிவனை முதன்மைப்படுத்தி வழிபடும் சமயமாகிய சைவத்தையும், அடியார்களது வரலாறு, தொண்டு நிறைந்த வாழ்வு, முத்தி பெற்ற நிலை ஆகியவற்றையும் விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதே பெரிய புராணத்தின் நோக்கம் ஆகும்.

**காப்பியச் சிறப்பு**

அறுபத்து மூன்று நாயன்மார்களின் புகழ் மிக்க வரலாற்றினை உலகறிய, பக்திச் சுவையோடு விரிவாக எழுதிய பெருமைக்கு உரியவர் சேக்கிழார் ஆவார். அவர் சோழ நாட்டு அமைச்சராக இருந்தமையால் நாட்டின் பல பகுதிகளுக்கும், நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்கும் நேரில் சென்று, அவ்விடத்தில் செவிவழி மரபாக வழங்கும் வரலாற்றுச் செய்திகளையும் தொகுத்து இந்நூலை அமைத்தார் என்பர்.

பிற மொழிக் கதைகளைத் தழுவாமல், தமிழ் மக்களையும், தமிழகச் சூழலையும் மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களைப் போலவே பெரியபுராணம் என்னும் நூல் சிறப்புற்றுத் திகழ்கின்றது. ஆண் பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

**கம்பராமாயணக் காப்பியத்தின் சிறப்புகள்**

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் காப்பிய நூல்களுள் ஒன்று இராமாயணம். இந்நூலின் ஆசிரியர் கம்பர். சமயக் காப்பியங்களுள் இது வைணவ சமயத்தைச் சார்ந்தது. இந்தக் காப்பியம் தோன்றிய காலம் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆண்ட, கி.பி. 12-ஆம் நூற்றாண்டாகும். சிலர் ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கூறுவர். சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் மரபில் தோன்றிய கம்பரை ஆதரித்தவர் திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த சடையப்ப வள்ளல் ஆவார். வான்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினார். அதனை, தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப ஈடும் இணையும் இல்லாமல் கம்பர் தமிழில் தந்த காவியமே இராமாயணமாகும். கம்பர், தம் நூலுக்கு இராமாவதாரம் என்று பெயரிட்டார். இக்காப்பியம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

காப்பிய அமைப்பு

இக்காப்பியம் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இந்த ஆறு காண்டங்களின் சிறு பிரிவுகளாக 113 படலங்கள் உள்ளன. மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 10,500 ஆகும். (காண்டம் - பெரும்பிரிவு, படலம் - சிறுபிரிவு.)

**பெயர்க் காரணம்**

இக்காப்பியத்தின் கதை இராமனின் வரலாற்றைப் பற்றித் தெரிவிப்பதால்இராமாயணம் எனப்பட்டது. கம்பர் எழுதியதால் கம்ப இராமாயணம் எனப்பட்டது. இராம, அயணம் என்ற வடமொழிச் சொற்கள் இணைந்து இராமாயணம் என்றாயிற்று.

**காப்பிய நோக்கம்**

அடிப்படையில் அறமும், சமயமும் காப்பியத்தின் பொருளாக அமைகின்றன. மனிதர் யாவருக்கும் பயன் தரும் ஒழுக்க முறைகளையும் பண்பாட்டினையும் குறிக்கோளினையும் ஆட்சிச் சிறப்பினையும் விளக்கும் அருமையான இலக்கியமாகத் திகழும் சிறப்புடையது கம்பராமாயணமாகும்.

**காப்பியச் சிறப்பு**

இந்நூல் நடையில் நின்றுயர் நாயகனாக விளங்கும் இராமன், தெய்வநிலையில் இருந்து இறங்கி மானுட நிலையில் மனிதனாக வாழ்ந்து காட்டிய தன்மைகளையும், சிறப்புகளையும் விளக்கும் ஓர் ஒப்பற்ற நூலாகும். இந்நூலில் கம்பர் வலியுறுத்தும் நீதியும் அறனும் மக்கட் சமுதாயம் அனைத்திற்கும் பொதுவானவை ஆகும்.

**காப்பியத் தலைவன்**

இலக்கணப்படி, காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வகையில் கம்பராமாயணத்தில் இராமனேதன்னிகரில்லாத் தலைவனாகப் போற்றப்படுகின்றான்.

**வைணவக் காப்பியம்**

திருமாலின் மானுட அவதாரமே இராமாவதாரமாகும். இந்நூலில் வைணவ சமயக் கருத்துகள் விரவிக் கிடக்கின்றன. மேலும் உயர்ந்த இலட்சியங்களை முன்னிறுத்தி இராமனை மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்திக் காட்டும் இலக்கியமே கம்பராமாயணமாகும். பல உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டு பாடப்பட்ட சமய நூலாக இந்நூல் விளங்குகிறது எனலாம்.

**நீதி உணர்த்தும் காப்பியம்**

கம்பராமாயணம் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கற்பு நெறி நின்று வாழவேண்டும் என்ற உண்மையை ஏகபத்தினி விரதனாம் - இராமன் மூலம் தெரிவிக்கின்றது. பிறன் மனைவியை விரும்பினால் அவனும் அவனைச் சார்ந்த சுற்றமும் குலமும் அழிந்துவிடும் என்பதை இந்நூல் விளக்குகின்றது. பிறனில் விழைவோர்கிளை யொடுங்கெடுப என்னும் நீதி (கிளை - சுற்றம்) இந்நூல் மூலம் உணர்த்தப்படுகிறது.

**இலக்கியச் சிறப்பு**

காப்பியத்தில் கதைப் பாத்திரங்களின் இயல்புக்கு ஏற்றவாறும் சூழலுக்கு இசைந்தவாறும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றவாறும் உரிய சந்தங்களோடு (சந்தம் - ஓசை நயம்) அமைத்துக் கம்பர் பாடியிருப்பதால் கற்போர் உள்ளத்தில் நன்கு பதிந்து விடுகின்றது. கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ என்னும் கருத்திற்கு ஏற்ப, கம்பராமாயணம் உயர் கருத்துகளைத் தெரிவிப்பதாக விளங்குகின்றது. மேலும் வான்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகக் கம்பர் படைத்துள்ளார் என்று வ.வே.சு. ஐயர் போற்றியுள்ளார்.

கல்வியில் பெரியர் கம்பர் என்றும் கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்றும் வழங்கும் மொழிகள் அவரது கவித்திறனைப் பறை சாற்றும். பாரதியார் தம் பாடலில் புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்று போற்றியுள்ளார்.

“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை’ ’ என்றும் பாராட்டியுள்ளார் பாரதியார்.